PGIE
POST GRADUATE INSTITUTE OF ENGLISH

# ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

# வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

**2017**

# ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2005-10-31 ஆம் திகதியிடப்பட்டதும் 1417/12 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் ஆக்கப்பட்ட கட்டளையின் கீழும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது தாபிக்கப்பட்டுள்ளது.

# தொலைநோக்கு

இலங்கையில் ஆங்கிலமொழி கற்பதற்கும் அத்துடன் பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சிகள் சார்பில் தலைமை வழங்குவதற்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய தேவைகளுக்கும் போக்குகளுக்கும் அமைவாக படைப்புகளை ஆக்கும் திறனுள்ளவர்களாகவும் சூழ்நிலை சார்ந்தவர்களாகவும் முன்னுரிமையாளராக பிரபல்யமடைதல்.

# செயற்பணி


சுயமாக கற்பதன் மூலம் ஆங்கிலமொழி மற்றும் இலக்கிய கல்வியில் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான கல்வி, ஆராய்ச்சி, ஆசிரியர் கல்வி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கற்றலில் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல் உட்பட தேசிய மட்டத்தில் ஆங்கில மொழிக் கல்வியினை மேம்படுத்துவதும் அதற்கு தலைமைத்துவம் வழங்குதலும்.

## ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
## திருத்தப்பட்ட ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2017

## பொருளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | **பணிப்பாளர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்க அறிமுகம்** | 4 |
| | (அ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உறுப்பினர்கள் | 5 |
| | (i) முகாமைத்துவ சபை | 5 |
| | (ii) இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி | 7 |
| | (iii) இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி | 9 |
| | (iv) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள் | 10 |
| 2. | **பணிப்பாளரின் மீளாய்வு** | 12 |
| | (அ) சுருக்க அறிமுகம் | 12 |
| | (ஆ) வெற்றிகள் | 16 |
| | (இ) பின்னடைவுகள் | 25 |
| | (ஈ) எதிர்கால திட்டங்கள் | 26 |
| 3. | **பணிப்பாளரின் அறிக்கை முகாமைத்துவமும் நிருவாக முன்னேற்றமும்** | 31 |
| 4. | **திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்று (புதிய படிவத்திற்கு அமைவாக)** | 49 |
| 5. | **கணக்காய்வுக் குழுவின் அறிக்கை** | 51 |
| 6. | **கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று** | 52 |
| 7. | **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** | 76 |
| 8. | **கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்** | 84 |

01. பணிப்பாளர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்க அறிமுகம்



(அ) (i) **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்**

| **இல**. | **பெயர்** | **பதவிப் பெயர்** |
|---|---|---|
| 1. | கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல | பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 9.1.(ஆ) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் அல்லது இந்த விடயத்துக்குப் பொறுப்பான வேறு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கலாம். | | |
| 2. | திருமதி ஆர்.பி.ஆர்.ரணசிங்க | உதவிப் பணிப்பாளர் (புலமைப்பரிசில்) - அபிவிருத்தி பிரிவு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| 3. | திரு.என்.கே.ஜி.கே.நெம்மவத்த | மேலதிக செயலாளர், உயர்கல்வி அமைச்சு |
| 9.1.(ஈ) பல்கலைக்கழக ஆங்கில கல்விப் பிரிவின் தலைவர் | | |
| 4. | கலாநிதி கே.ஆர்.எம். த சில்வா | தலைவர், மொழிக் கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் |
| 9.2.(அ) பீடசபையின் பிரதிநிதி ஒருவர் | | |
| 5. | பேராசிரியர் என்.ஆர்.அர்த்தநாயக்க | ஓய்வுநிலை பேராசிரியர், திறந்த பல்கலைக்கழகம் |
| 9.2.(ஆ) ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆங்கில மொழி பற்றிய பேராசிரியர்கள் ஐவர் அல்லது ஆங்கில மொழி கற்பிக்கும் மற்றும் மொழிக் கல்வி (ஏற்புடையதானவாறு) கற்பித்தல் பொறுப்பான கல்விப் பிரிவின் தலைவர்கள் | | |
| 6 | பேராசிரியர் நிலுபர் த மெல் | ஆங்கிலமொழி பற்றிய சிரேட்ட பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 7.. | கலாநிதி ஜே.மனதுங்க | சிவில் பொறியியல் கல்விப் பிரிவு, மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| 8. | பேராசிரியர் நெலுக்க சில்வா | பேராசிரியர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 9.2.(இ) பல்கலைக்கழக மூதவை சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர் | | |
| 9 | கலாநிதி ஜே.சி.என்.ராஜேந்திர | பௌதிக விஞ்ஞான பேராசிரியர், திறந்த பல்கலைகழகம் / பணிப்பாளர், சருவதேச உறவுகள் பிரிவு (திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவை சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்) |
| 9.2.(ஈ) கல்விப் பிரிவு அதன் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் | | |
| 10. | கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே | சிரேட்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் - கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் |

| | | |
|---|---|---|
| 11. | கலாநிதி.எஸ்.எம்.ஹேரத் | சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் - உறுப்பினர், கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் |
| 9.2.(உ) தொழினுட்ப, கல்வி அல்லது நிருவாக துறைசார்பில் சிறந்த பங்களிப்பினை வழங்கியவர்களிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் | | |
| 12. | பேராசிரியர் டபிள்யு.ஐ.சிறிவீர | ஓய்வுநிலைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக் கழகம் |
| 13. | கலாநிதி எல்.ஆர்.ஜயசேக்கர | சிரேட்ட விரிவுரையாளர் தாவரவியல் கல்விப் பிரிவு, விஞ்ஞான பீடம், களனி பல்கலைக்கழகம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்) |
| 9.2.(ஊ) ஆசிரியர் கல்வியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு தேசிய கல்வி நிறுவனத்தினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர் | | |
| 14. | திருமதி வீ.டி.சி.பி.பெரேரா | பணிப்பாளர், வெளிநாட்டுவள முகாமைத்துவப் பிரிவு மற்றும் பணிப்பாளர், ஆங்கிலம் (கடமைகளை நிறைவேற்றும்) தேசிய கல்வி நிறுவனம் |
| 15. | திரு.எம்.எவ்.எஸ்.பி.ஜயவர்தன | பிரதிப் பணிப்பாளர் அதிபதி, விஞ்ஞான மற்றும் தொழினுட்பவியல் தேசிய கல்வி நிறுவனம் |
| பொது திறைசேரியின் பிரதிநிதி | | |
| 16. | கலாநிதி எம்.கே.சி.சேனாநாயக்க | பணிப்பாளர், அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம், பொதுத் திறைசேரி |

(ii) **இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல | தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 12.(1)(அ) தலைவராக பணிப்பாளர் | | |
| 2. | கலாநிதி டபிள்யு.எம்.செனவிரத்ன | நூலகர், திறந்த பல்கலைக்கழகம் |
| 3. | திருமதி ஆர்.அமரசேக்கர | பதில் நூலகர், திறந்த பல்கலைக்கழகம் |
| 12.(1)(ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் கற்பித்தல் பொறுப்பாளர் | | |
| 4 | திருமதி எச்.டி.விஜேசேக்கர | சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 5. | திருமதி எம்.ஐ.ஜான்ஸ் | விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 6. | கலாநிதி எஸ்.எம்.ஹேரத் | சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 12.(1)(இ) உரிய சபைக்கு அல்லது நிறுவனத்திற்கு கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படும் கல்வி சபையின் நிரந்தர ஆசிரியர்கள் | | |
| 7. | திருமதி டபிள்யு.யூ.எஸ்.எம்.ஆர்.பெரேரா | மாணவப் பிரதிநிதி |
| 8. | திருமதி ஓ.எச்.ரத்னசிறி | மாணவப் பிரதிநிதி |
| 9. | திருமதி எஸ்.எம்.நியங்கொட | மாணவப் பிரதிநிதி |
| 12.(1)(ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் மூன்று மாணவர்கள் | | |
| 10. | திருமதி எல்.கே.குமாரணதுங்க | வெளிவாரி விரிவுரையாளர், இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி பற்றிய முதுமாணி பட்டம், திறந்த பல்கலைக்கழகம் (உறுப்பினர்) |
| 11. | திருமதி பி.நாகசுந்தரம் | வெளிவாரி விரிவுரையாளர், இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி பற்றிய முதுமாணி பட்டம், திறந்த பல்கலைக்கழகம் (உறுப்பினர்) |
| 12. | கலாநிதி ஆர்.ரசூல் | சிரேட்ட விரிவுரையாளர் ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவு, களனி பல்கலைக்கழகம் |
| 12.(1)(உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர் | | |

| | | |
|---|---|---|
| 13. | கலாநிதி டி.தேவேந்திர | சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் |
| 14. | திருமதி எஸ்.ஆர்.இலங்ககோன் | சிரேட்ட விரிவுரையாளர் ஆங்கிலமொழி கற்கைகள் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 15. | கலாநிதி கே.ஆர்.எம். த சில்வா | சிரேட்ட பேராசிரியர் / மொழிக் கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் |
| 12.(1)(உ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் மூவர் | | |

(iii) **இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல | தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 12.(1)(அ) தலைவராக பணிப்பாளர் | | |
| 2. | கலாநிதி டபிள்யு.எம்.செனவிரத்ன | நூலகர், திறந்த பல்கலைக்கழகம் |
| 3. | திருமதி ஆர்.அமரசேக்கர | பதில் நூலகர், திறந்த பல்கலைக்கழகம் |
| 2.(1)(ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் கற்பித்தல் பொறுப்பாளர் | | |
| 4 | திருமதி எச்.டி.விஜேசேக்கர | சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 5. | திருமதி எம்.ஐ.ஜான்ஸ் | விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 6. | கலாநிதி எஸ்.எம்.ஹேரத் | சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 12.(1)(இ) உரிய சபைக்கு அல்லது நிறுவனத்திற்கு கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படும் கல்வி சபையின் நிரந்தர ஆசிரியர்கள் | | |
| 7. | திருமதி டபிள்யு.எம்.ஜி.யு.விஜேயசுந்தர | மாணவப் பிரதிநிதி, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 8. | திருமதி எல்.எம்.எஸ்.விஜேதுங்க | மாணவப் பிரதிநிதி, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| 12.(1)(ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் இரண்டு மாணவர்கள் | | |
| 9. | கலாநிதி டி.தேவேந்திர | சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் |
| 10. | கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே | சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் |
| 12.(1)(உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர் | | |
| 11. | பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க | ஆங்கிலமொழி சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 12. | கலாநிதி வி.வி.மெதவத்தேகெதர | சிரேட்ட விரிவுரையாளர், மொழி கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம் |
| 13. | கலாநிதி ஜே.கெனடி | தலைவர், ஆங்கில மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் |
| 12.(1)(ஊ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் மூவர் | | |
| 14. | கலாநிதி லக்ஷ்மி த சில்வா | முன்னாள் சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழிக் கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| 15. | கலாநிதி எஸ்.விஜேவர்தன | சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழிக் கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 16 | கலாநிதி கே.வர்ணபால | சிரேட்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, ஶ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம் |
| 12.(1)(எ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மேற்போந்த வகுப்பீடுகளின் கீழ் எடுக்கப்படாத ஆசிரியர்கள் மூவர் | | |

(iv) **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்**

**நிரந்தர பதவியணி உறுப்பினர்களின் பெயர்கள்**

| இல. | பெயர் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1 | கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல<br>PhD (ஹொங்கொங்) | பணிப்பாளர் |
| 2 | திருமதி எச்.டி.விஜேசேக்கர<br>MA-TESL (ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) | சிரேட்ட விரிவுரையாளர் |
| 3 | கலாநிதி எஸ்.எம்.ஹேரத்<br>PhD (டொரன்டோ, கனடா) | சிரேட்ட விரிவுரையாளர் |
| 4 | திருமதி எம்.ஐ.ஜான்ஸ்<br>MA-TESL (ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) | விரிவுரையாளர் (தகுதிகூர் காலம்) |
| 5 | திரு.டபிள்யு.டி.ரீ.திலகரத்ன<br>BSc (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) | சிரேட்ட உதவிப் பதிவாளர் |
| 6 | திருமதி.எஸ்.எம்.பி.ஏ.சுபானி<br>BSc - Business Administration (ஸ்ரீ ஜயவர்தனபுர) | உதவி நிதி பொறுப்பாளர் |
| 7 | திருமதி.ஜி.பி.ஐ.டி.சிறிவர்தன | கணனி பிரயோக உதவியாளர் |
| 8 | திரு.எச்.என்.என். பெரேரா | கணனி பிரயோக உதவியாளர் |
| 9 | திருமதி டி.எம்.ரீ.பி.திசாநாயக்க<br>BA (பேராதனை) | கணனி பிரயோக உதவியாளர் |
| 10 | திருமதி ஏ.ஆர்.எஸ்.கே.ராஜபக்ஷ | புத்தக பதியுநர் |
| 11 | திருமதி ஏ.ஜீ.ஆர்.எம்.டி.கே.ரணவீர | முகாமைத்துவ உதவியாளர் |
| 12 | திரு.டபிள்யு.எம்.டி.ஆர்.பீ.வீரசிங்க | தொழிலாளர் |
| 13 | திரு.ஆர்.யு.ஜயசிங்க | வேலைகள் உதவியாளர் |

## 2. பணிப்பாளரின் மீளாய்வு

### (அ) சுருக்க அறிமுகம்

2017 ஆம் ஆண்டானது நிறுவனத்தின் கணிசமான அபிவிருத்தியை நோக்கி சென்ற ஆண்டாகும். நிறுவனத்தின் மனிதவள ஆற்றலை மேம்படுத்தி உயர் தகைமை கொண்ட அனுபவம் மிக்க கல்விசார் பதவியணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை சிரேட்ட விரிவுரையாளர் ஒருவராக ஆட்சேர்ப்புச் செய்தவற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமானது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் கல்விசாரா பதவியணியை மேலும் பலப்படுத்தும் நோக்கில் வேலைகள் உதவியாளர் ஒருவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் பரந்துபட்ட பதவியணியின் ஒருபகுதியாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் சார்பில் இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டன.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் சார்பில் ஒதுக்கப்பட்ட கட்டடமொன்றை நடாத்திச் செல்வதன் மூலம் நிறுவனத்தின் செயற்பாடு அதேபோன்று அதன் சேவை நாடுநர்களுக்கு உயர்மட்ட சேவை வழங்குவதற்கான அதன் ஆற்றலை பலப்படுத்திக் கொண்டது. 2017 ஆம் ஆண்டில் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஊடாக மார்ச் மற்றும் ஒக்ரோபர் ஆகிய இரண்டு மாதங்களில் சமூகவியல் மற்றும் மானிடவியல் என்பன பொருட்டு கற்கை மற்றும் ஆராய்ச்சி வழிமுறைகள் என்னும் தலைப்பில் வெற்றிகரமான குறுகியகால பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. தரம்மிக்க ஆய்வுநுழைவு மற்றும் ஆய்வுகடிதங்கள் உட்பட முன்வைப்புகள் என்பன பொருட்டிலான திறன்களைத் தழுவிய 30 மணித்தியாலம் கொண்ட இந்த விரிவான பாடநெறிக்கு மத்திய வங்கி, சட்டமா அதிபர் திணைக்களம், பல்கலைக்கழக கல்விசார் பதவியணி உட்பட அரசசார்பற்ற அமைப்புகள் அதேபோன்று பிற ஆராச்சி அமைப்புகளின் பதவியணி போன்ற பரந்துபட்ட துறைசார்ந்த மாணவர்கள் ஈர்க்கப்பட்டிருந்தனர். இந்த பாடநெறி தொடர்பிலான தகவல்கள் மற்றும் மாணவர்களினால் வழங்கப்பட்ட சுய கருத்துக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்போந்த குறுகிய கால பாடநெறிகளுக்கு மேலதிகமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் க.பொ.த (சா.த) இலக்கியம் தொடர்பில் 22 மணித்தியாலம் கொண்ட குறுகிய கால பாடநெறியொன்றும் அதேபோன்று க.பொ.த (உ.த) இலக்கியம் தொடர்பில் 42 மணித்தியாலங்கள் கொண்ட மேலுமொரு குறுகியகால பாடநெறியும் நடாத்தப்பட்டன. இந்த இரண்டு பாடநெறிகளுக்கும் ஆகக்கூடிய கேள்வி நிலவியதோடு, இதற்கு சாதகமான பின்னூட்டல்களும் கிடைக்கப்பெற்றன. கட்டடம் கிடைக்கப்பெற்றமையினால் நிறுவனத்தின் நிறுவன ரீதியிலான நற்பெயரை மேம்படுத்தும் பொருட்டு பங்களிப்பினை நல்கும் விதத்தில் புதிய வாய்ப்புகள் பலவற்றிற்கான அதன் பங்களிப்பினை வழங்குவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு முடியுமானது 2016 ஆம் ஆண்டின் இறுதிக் கால பகுதியிலும் 2017 ஆம் ஆண்டிலும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நிறுவனத்தின் நிறுவன வலையமைப்பை கட்டியெழுப்புவதற்கு மிக முக்கியமாக பங்களிப்பு நல்கிய சருவதேச செயலமர்வுகள் மூன்று நடாத்தப்பட்டதோடு, எதிர்கால சருவதேச கூட்டு செயற்பாடுகள் மற்றும் பங்களிப்புகள் சார்பிலான வழியும் திறக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக அழைப்பின் பேரில் சருவதேச நிபுணர்கள் இருவரினால் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதோடு, பொதுமக்களின் முன்வைப்புகளும் செய்யப்பட்டன. இந்த ஆண்டிலும் ஐக்கிய அமெரிக்க குடியரசின் நியூயோர்க்

அமைந்துள்ள சிட்டி பல்கலைக்கழகத்தின் பரூச் கல்லூரியுடன் இணைந்து இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் பாட சிபாரிசுகளின் மூலம் சருவதேச ஒத்துழைப்பினை தாபிக்கும் முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. பரஸ்பரம் கற்பதற்கும் கலாசாரம் மற்றும் உள்நாட்டு அறிவில் நலன்களை பெறக்கூடிய விதத்திலும் மாணவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படக் கூடிய விதத்தில் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கற்றல் வாய்ப்பின் ஊடாக பரூச் கல்லூரியின் மாணவர்களுடன் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்கள் இணைந்து செயற்பட்டனர்.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் தொழில்சார் ஆங்கில பயிற்சி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஆகிய புதிய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் சேர்ப்பதன் மூலம் நிறுவனத்தின் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிப்பதோடு, நாட்டில் ஆங்கில கல்வியினை மேம்படுத்துவது சம்பந்தமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு உள்ள தாக்கம் மேலும் விரிவடையும். விசேட இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஊடாக Content Language Integrated Learning (CLIL) நுழைவினை பயன்படுத்தி, விடயங்கள் மற்றும் ஆங்கில மொழி பற்றிய அறிவு ஆகிய இரண்டையும் வழங்கக்கூடிய புதிய ஆசிரிய சமூகத்தை பயிற்றுவிப்பதன் மூலம் நாட்டினுள் ஆங்கிலமொழி மட்டத்தை அதிகரிப்பதற்கு அதன் பங்களிப்பினை வழங்குவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமாகும்.

2017 ஆம் ஆண்டில் மாநாட்டு அறைக்கான கதிரைகள், குளிரூட்டி இயந்திரங்கள், சத்த கட்டுப்பாட்டு முறைமை பல்ஊடக வசதிகள் என்பன வழங்குவதன் மூலம் அதன் புதிய கட்டடத்தை விருத்தி செய்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமானது. மாநாட்டு அறைக்குள் 75 பேர்களுக்கு வசதிகள் வழங்கலாமென்பதோடு, 2017 திசெம்பர் மாதம் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி மாநாடு போன்ற பொது நிகழ்ச்சிகளுக்கும் சிறந்ததாகும். இதற்கு மேலதிகமாக அண்ணளவாக 35 பேர்களுக்கு இடவசதி அளிக்கக்கூடிய விதத்தில் மேலும் இரண்டு அறைகள் குளிரூட்டல் மற்றும் பல்ஊடக வசதிகளுடன் உள்ளதோடு, சிறிய வைபவங்களுக்கு இதனை பயன்படுத்தலாமென்பதோடு, மேற்போந்த சருவதேச மாநாடுகளை நடாத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன. அங்கவீனமுற்றவர்கள் சார்பில் தேவையான வசதிகளை செய்யும் பொருட்டு மின் உயர்த்தியொன்று பொருத்தப்பட்டதோடு கட்டடத்தின் சகல முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்து மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றும் பொறுத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கியதாக 2018 ஆம் ஆண்டினுள் மேலும் முன்னேற்றம் அடைவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் எதிர்பார்க்கின்றது. இந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் முழுநேர கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையின் மூலம் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதோடு, குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் தரம் அதே விதத்தில் மேம்படுத்தப்படும். நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவினை விருத்தி செய்யும் பொருட்டு வெளிவாரி மூலவளங்களிலிருந்து ஆராய்ச்சி நன்கொடைகளை பெற்றுக் கொள்வதற்கும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த நிறுவனத்தினால் அதன் நடவடிக்கைகளில்

மாற்றங்களைக் கொண்டுவரும் ஒரு கட்டத்தில் நுழைந்துள்ளமையினால் அதன் பொருட்டு புதிய சவால்களை வெற்றி கண்டு 2018 ஆம் ஆணடில் திறமுறை திட்டமொன்று வரையப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆணடிலிருந்து முன்னோக்கியதாக நிறுவனத்திற்கு உள்ள சவாலானது இலங்கையில் உயர் கல்வியில் அதன் இடத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதும் புதிய வாய்ப்புகளை இனங்கண்டு சவால்களை வெற்றிகரமாக தீர்த்து வளர்ச்சி காண்பதுமாகும்.

**கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல்ல,**
**பணிப்பாளர்**
**ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**

**ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் வளங்கள் மற்றும் மாணவர்களின் தகவல்களும்**

அ. நடாத்தப்பட்ட பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் எண்ணிக்கை

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்.

2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்

ஆ. நடாத்தப்பட்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகளின் எண்ணிக்கை

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.

2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.

**மாணவர்கள்**

| **நிகழ்ச்சித்திட்டம்** | **மொத்த மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம். (MA in TESL) | 66 |
| இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம். (PG Dop/MA in TESL) | 135 |
| இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் | 58 |
| | 259 |

**வளங்கள்**

| **மொத்த கல்வி பதவியணியினர்** | **மொத்த கல்விசாரா பதவியணியினர்** |
|---|---|
| 01 பணிப்பாளர்<br>02 *சிரேட்ட விரிவுரையாளர்கள் - 03<br>01விரிவுரையாளர்கள் - 01<br>--------------------------<br><br>(* 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து சிரேட்ட விரிவுரையாளர் ஒருவர் படிப்பு லீவு பெற்றுள்ளதோடு, சிரேட்ட விரிவுரையாளர் ஒருவர் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.) | நிருவாக பதவியணியினர் - 02<br>நிருவாகம் சாராத பதவியணியினர் - 07 |
| 05 | 09 |

(ஆ) **வெற்றிகள்**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் கட்டட வசதிகளுடன் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் பொது விழாக்களை நடாத்தியது:

**ஆராய்ச்சி சங்கம்**

* இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் (இரண்டாம் மொழி சூழ்நிலையில்) - 2017 சனவரி மாதம் 16

* இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம். (MA in TESL) - 2017 பெப்ரவரி மாதம் 03

**ஆராய்ச்சி சம்மேளனம்**

இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் - 2017 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி பிரதம அதிதியாக தலைமை வகித்த கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சுனில் ஹெட்டிஆரச்சி அவர்களுடன்




**அதிதியின் விரிவுரை**

"In Defense of EFL" பற்றி நியூயோர்க்கிலுள்ள சிட்டி பல்கலைக்கழகத்தின் பரூச் கல்லூரியின் கலாநிதி புரூக் சைபர் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பொது விரிவுரை.






ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டத்திற்கு ஆகஸ்ட் மாதத்தில் 54 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர். அனுமதிக்காக விண்ணப்பித்த 170 பேரிலிருந்து அனுமதிப்பு பரீட்சைக்கு 134 பேர்கள் தோற்றியதோடு 54 பேர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த குழுவுடன் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 181 ஆகும். திசெம்பர் மாதத்தில் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல்

தொடர்பிலான கலைமானி பட்டம் சார்பில் 23 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர். விண்ணப்பித்த 64 மாணவர்களில் 54 பேர் நுழைவு பரீட்சைக்கு தோற்றியதோடு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை 58 ஆக உயர்த்தியதோடு, 23 மாணவர்கள் பதிவு செய்துகொள்ளப்பட்டனர்.

கணிசமான அளவு கேள்வி நிலவிய 20 மணித்தியாலயத்திலிருந்து 40 மணித்தியாலங்களாக பரந்து செல்லும் குறுகியகால பாடநெறியொன்று ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.




*க.பொ.த (சா.த) புதிய பாடத் திட்டத்திற்கான ஆங்கிலமொழி இலக்கியம் கற்பித்தலில் ஆசிரியர்களின் ஆற்றலை மேம்படுத்தல் பற்றிய குறுகிய கால பாடநெறியில் கலந்துகொண்ட மாணவர்கள்.*







*க.பொ.த (உ.த) ஆங்கிலமொழி இலக்கியம் தொடர்பிலான புதிய பாடத் திட்டம் பற்றிய குறுகிய கால பாடநெறி.*

2017**ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குறுகிய கால பாடநெறி தொடர்பிலான விபரம்**

| | **பாடநெறியின் பெயர்** | **காலப்பகுதி** | **மொழிமூலம்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | க.பொ.த (சா.த) புதிய பாடத் திட்டத்திற்கான ஆங்கிலமொழி இலக்கியம் கற்பித்தலில் ஆசிரியர்களின் ஆற்றலை மேம்படுத் தல் பற்றிய குறுகிய கால பாடநெறி | 22 மணி. (பெப்ரவரி 22 - ஏப்ரல் 05) | ஆங்கிலம் | 40 |
| 2 | சமூகவியல் மற்றும் மானிட வியல் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறி | 32 மணி. (மார்ச் 06 - மே 24) | ஆங்கிலம் | 30 |
| 3 | மேல் மாகாண கல்வித் திணைக் களத்தின் ஆங்கில மொழி பற்றிய ஆலோசகர் மற்றும் உதவிப் பணிப்பாளர்களுக்கான திறன் அபிவிருத்தி செயலமர்வு | 3 நாட்கள் (ஏப்ரல் 26 - 28) | ஆங்கிலம் | 49 |
| 4 | க.பொ.த (உ.த) ஆங்கிலமொழி இலக்கிய புதிய பாடத்திட்டம் பற்றிய குறுகிய கால பாடநெறி | 45 மணி. (செப்ரெம்பர் 11 - நவெம்பர் 20) | ஆங்கிலம் | 26 |
| 5 | சமூகவியல் மற்றும் மானிட வியல் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறி | 32 மணி. (ஒக்ரோபர் - திசெம்பர்) | ஆங்கிலம் | 28 |

இந்த குறுகிய கால பாடநெறிகளுள் சமூகவியல் மற்றும் மானிடவியல் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறியானது புதிய பாடநெறியொன்றாவதோடு, மேற்கொள்ளப்பட்டுவரும் கலைமானி பட்டத்திலிருந்து தத்துவமானி பட்டம் வரை பரந்து செல்லும் பட்டப்பின்படிப்பு தகைமைகளுக்காக பதிவு செய்து கொள்ளும் வேறுபட்ட துறைகளில் உள்ள மாணவர்களின் அதிகரித்து வரும் கேள்விக்கு இதன் மூலம் தீர்வு வழங்கப்படுகின்றது. இங்கு கீழ் குறிப்பிடப்படுவது இந்த பாடநெறிகள் தொடர்பில் மாணவர்கள் சிலரின் வெளிப்படுத்தல்களாகும்.

**பாடநெறிகள் தொடர்பில் மாணவர்கள் சிலரின் வெளிப்படுத்தல்கள்**







*"கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறியானது" ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் மாணவர்களினதும் அதேபோன்று தொழில்சார்பாளர்களினதும் மனதை கவரும் நிகழ்ச்சித்திட்டமொன்றாக இதனை நான் கண்டேன். இலங்கையில் இந்தத் துறை தொடர்பில் விசேடமான பாடநெறிகளுக்கான பற்றாக்குறை பிரச்சினையொன்றாகத் தெரிகின்றது. இத்தகைய விதத்திலான விசேட பாடநெறியொன்றை ஆரம்பிப்பதில் முன்னோடியாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எதிர்கால ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வாய்ப்பினை வழங்கியுள்ளது. விரிவுரையாளர்கள் அறிவுபூர்வமாகவும் அதேபோன்று மாணவர்களின் அறிவினை மிகச் சிறப்பாக பூர்த்தி செய்வதற்கும் முட்பட்டுள்ளனர். எனக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழத்தின் பணியாட்டொகுதியினர் சகலரையும் நட்புறவுடன் தனிப்பட்ட ரீதியில் சந்திக்க முடிந்தது. பாடநெறி ஒழுங்கமைப்பு மற்றும் முன்வைப்பு தொடர்பில் நான் மிகவும் திருப்தியுற்றேன். எதிர்கால ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த பாடநெறியை நான் உயர் மட்டத்தில் சிபாரிசு செய்கின்றேன்."*

ரீ.உதயசீலன்
சிரேட்ட உதவிப் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி.

*"கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறியானது" ஆராய்ச்சியாளர்கள் எவருக்கும் ஆராய்ச்சி முறைபற்றி மிகச் சிறந்த முறையில் அறிமுகப்படுத்தக்கூடிய பாடநெறியொன்றாகும். இதன் மூலம் மானிடவியல் மாணவர் ஒருவருக்கு மதிப்பிட முடியாத செயல்முறை ரீதியிலான தரம் மிக்க அதேபோன்று பண்புநிலை ஆகிய இரண்டு விதத்திலும் வழிகாட்டி நிற்கின்றது. இந்த பாடநெறி சிறந்த ஆசிரியர் குழாம் மற்றும் உரிய முறையில் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பின் ஊடாக பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான ஆரம்ப பட்டம் அதேபோன்று பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் ஊடாக கிடைக்கப்பெறாத ஆராய்ச்சி முறைகளாவன விலைமதிக்க முடியாத அறிமுகமொன்றாகும். பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி கல்வியினை விரும்பும் எந்தவொரு ஆராய்ச்சியாளருக்கும் இந்தப் பாடநெறியை நான் உயர்மட்டத்தில் சிபாரிசு செய்கின்றேன்."*

தினுசிகா திசாநாயக்க,
நிறைவேற்றுப் பணிப்பாளர், சட்டம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு

*"2017 கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறியினை வெற்றிகரமாக பூர்ததி செய்தமை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்த பாடநெறி தொழில்சார் ரீதியில்*

*நடாத்தப்பட்டதோடு, உரிய துறைகளில் நிபுணத்துவமும் அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களைக் கொண்டிருந்தது. எமக்கு வழங்கப்பட்ட புத்தகங்களும் அதேபோன்று கைநூல்களும் பெறுமதி வாய்ந்தவையாவதோடு, இந்த நிகழ்ச்சித்திட்டமானது சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. உழைப்புடனான நாளொன்றின் இறுதியில் இந்த பாடநெறியினை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர்களுக்கு தேனீர் மற்றும் சிற்றூண்டி வழங்கியமை புத்திசாதுரியமான விடயமொன்றாகும். கைநூல் சம்பந்தமான செய்முறைகள் சம்பந்தமாக மேலதிகமாக 15-20 விநாடிகள் இருந்திருந்தால் அது சிறப்பாக அமைந்திருக்கும். நான் இதனை கற்று, கற்பித்தல் தொடர்பில் திருப்தியுறுகிறேன்."*

தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க,
பிரதி மன்றாடி அதிபதி,
சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை.

குறுகிய கால பாடநெறிகளுக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பத்து கலைமாமணி மாணவர்களும் ஐந்து பட்டப்பின் படிப்பு டிப்ளோ மாணவர்களும் அவர்களுடைய பட்டத்தினைப் பெற்றுக் கொண்டதன் மூலம் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் தொடர்பில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஒரு மைற் கல்லைத் தொட்டது.

நிறுவனத்திற்கு இந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை வரலாற்று சிறப்புவாய்ந்ததோடு, கடந்த பல வருடங்களாக கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்யும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட முறைமைகள் உட்பட செயற்பாடுகள் சிறந்த முறையில் உள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது. 2017 ஆம் ஆண்டில் மேலும் ஒன்பது மாணவர்கள் அவர்களுடைய கலைமானி பட்டத்தை பூர்த்தி செய்ததோடு,. மேலும் நான்கு பேர் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவைப் பெற்றுக் கொண்டனர். மாவணர்களின் பின்னூட்டல் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு அங்கமாக தங்களுடைய தொழிலின் பொருட்டு இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் பங்களிப்பு நல்கிய விதம் சம்பந்தமாக தெளிவுபடுத்துமாறு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இங்கு கீழ் குறிப்பிடப்படுவது 2016 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற மாணவர்களினால் வழங்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் ஆகும்.

**வெளிப்படுத்தல் - இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டதாரிகள்** - 2016

*"இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டத்தின் மூலம் கற்பித்தல் ஆற்றல், பரிசோதனை, மதிப்பிடல், பாடநெறி மற்றும் பொருள்சார் திட்டமிடல், ஆங்கில மொழி கற்பித்தலில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி போன்றவை ஆங்கிலமொழி கற்பித்தலில் முக்கியமான சகல பிரிவுகளையும் தழுவியுள்ளது. இந்த பாடநெறியின் ஊடாக கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டின்பால் கற்கும் ஒ ருவரின் பக்கத்திலிருந்து பார்ப்பதற்கு பயிற்சி கிடைப்பதோடு, பயனுள்ள கற்பித்தலின் இரகசியம் இதுவென நான் கருதுகின்றேன்*

*பிரயோக மற்றும் உளவியல் மொழிக் கல்வி பாடநெறி ஊடாக விஞ்ஞான ரீதியிலான அனுகைகளுடன் கற்பித்தலில் ஈடுபடும் மொழி ஆசிரியர் ஒருவராக நான் மாறினேன். கற்கின்ற ஒருவரின் மனதில் கற்பித்தல்*

*செயற்பாடு உள்வாங்கப்படுகின்றதென்பதை ஆசிரியர் உணரும் போது ஒவ்வொரு நாளும் மிகச் சிறந்த முறையில் கற்பிப்பதற்கு ஈடுபடுவது பரிபூரணமான அனுபவ மொன்றாக ஒவ்வொரு பாடமும் அமையும். கடந்தகால வினாப்பத்திரங்களில் உள்ள முறைகளை மாற்றுவதற்குப் பதிலாக பரீட்சைகளைத் திட்டமிடும் ஆற்றலையும் நான் பெற்றுக் கொண்டேன். சமூக மொழிக் கல்வியின் ஊடாக ஒரே மொழி சமூகத்தில் பல்வேறுபட்ட தரப்பினர்களினால், பிரிவுகளில் மற்றும் பின்னணியில் பயன்படுத்துவது எவ்வாறு என்பது பற்றிய எனது அறிவு விரிவடைந்தது. வாழ்க்கை பின்னணியில் மொழி எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றது என்பது பற்றி கற்பவரின் புரிந்துணர்வினை அதிகரிப்பது ஆசியர் ஒவ்வொருவருக்கும் முக்கியமானதாகும். பாடநெறிகள் ஒவ்வொன்றும் தொடர்பிலான மதிப்பீடுகளின் மூலம் ஆங்கில மொழில் கற்பித்தல் துறையில் புதிய போக்கினை ஆராய்ந்து செல்வதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்ததோடு, இது என்னுள் ஆங்கிலமொழி கற்பித்தல் தொடர்பிலான ஆராய்ச்சியின் மீது பிடிப்பினை ஏற்படுத்தியது. இதன் பெறுபேறாக உலகம் முழுவதும் ஆங்கிலமொழி கற்பித்தல் தொடர்பிலான கற்பித்தல் சாதனங்களை திட்டமிடுகையில் மாற்றமாக கருதப்படும் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய பாட நூல்களுக்கு உலகளாவிய மாற்றங்களை உள்ளடக்குதல் தொடர்பில் எனது ஆராய்ச்சிக் கற்கையினை அடிப்படையாகக் கொள்வதற்கு நான் தீர்மானித்தேன். இந்த கற்கை நெறி ஊடாக நான் எனது கற்பித்தல் திறனை மேம்படுத்திக் கொண்டதோடு, என்னிடம் கற்பவர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பாடபுத்தகத்திலுள்ள எந்தவொரு பாடத்தினையும் ஏற்புடைத்தாக்கிக் கொள்ளும் திறன் கிடைக்கப் பெற்றது. இலங்கையில் முழுமையான ஆங்கிலமொழி ஆசிரியர் ஒருவராக மாறுவதற்கு வாய்ப்பு வழங்கியமை சம்பந்தமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."*

சுதர்மா கமகே,
ஆங்கிலமொழி ஒருங்கிணைப்பாளர்,
ரிச்மன் கல்லூரி, காலி.

*"இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டம் அதன் இற்றைப்படுத்தப்பட்ட பாடநெறி ஊடாக இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய புதிய போக்கு மற்றும் மேம்பாடுகளுக்கு நான் உள்வாங்கப்பட்டேன். இதனூடாக பயனுள்ள கற்பித்தல், பாடநெறிகளை விருத்தி செய்தல், பரிசோதனை, வகுப்பறையில் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல் உட்பட நம்பிக்கையுடன் ஆங்கில மொழியை இரணடாம் மொழியாக பயன்படுத்தும் ஒருவராக மாறி ஆழமான பயிற்சியில் ஈடுபடுவதற்குத் தேவையான பலம்மிக்க அடிப்படையிலும் பகுப்பாய்வு ரீதியிலான திறனையும் பெற்றுத் தந்தது. மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட பரிசோதனைகளின் பல்வகைமை கற்கும் ஒருவராக வெற்றிபெறுவதற்கு எனக்குத் தேவையான கற்றல் திறன்கள் பலவற்றை பெற்றுத் தந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் முழுவதும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள் குழாம் எனது ஆராய்ச்சிக் கல்விக்காக விசேட மேற்பார்வையும் தொடர்ச்சியான வழிகாட்டல்களையும் உரிய காலத்தில் எனது பட்டப் படிப்பினை பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது."*

கேத்தக்கீ நாகஹவத்த,
ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவு,
கொழும்பு பல்கலைக்கழகம்.

*"இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஆங்கிலமொழி கற்பிக்கும் துறையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் தொழில்சார் ரீதியிலும் கல்வி அடிப்படையிலும் அபிவிருத்தி அடைவதற்கு சிறந்த பாடநெறியொன்றாகும். இந்த பாடநெறி முறையாக ஒழுங்கமைக்கப்பட்டதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான பாடநெறியொன்றாவதோடு, உயர்தொழில்சார் மட்டத்தில் நடாத்திச் செல்லப்படுகின்றது. துறைசார் நிபுணர்களினால் நடாத்தப்படும் விரிவுரைகள் சிறப்பானவையாவதோடு, இதில் பங்குபற்றியமை சிறப்பானதாகும்.*

*நான் தனிப்பட்ட வகையில் இந்த பாடநெறியின் ஊடாக பாரிய பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டேன். கற்பித்தல் தொடர்பிலான எனது அணுகுமுறையில் சகல பிரிவுகளின்பாலும் சார்பாக பாதிப்பினைச் செலுத்தியது. எனவே சேவை நிலையத்தில் எனது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் பாடநெறிகளை திருத்தும் போதும் முக்கிய பங்கினை வகிப்பதற்கு இதன் ஊடாக அறிவும் நம்பிக்கையும் கிடைத்தது. ஆராய்ச்சி வழிமுறை மற்றும் கற்பித்தல் ஆகிய பிரிவுகள் ஊடாக இந்த துறையில் அடிப்படை கிடைத்தமையினால் ஆகும். இதற்கு மேலதிகமாக ஆசிரியர் ஒருவராக பரிசோதகர் ஒருவராக பிரிட்டிஷ் கவுன்சிலில் இணைந்ததன் மூலம் தொழில் ரீதியில் முன்னோக்கிச் செல்வதற்கு இந்தப் பாடநெறி அடிப்படை தகைமையாய் அமைந்தது. எனது தனிப்பட்ட மற்றும் தொழில் முன்னேற்றம் சார்பில் உதவியாய் இருந்ததனால் மாத்திரம் அன்றி மேலும் முன்னோக்கிச் செல்வதற்கு ஊக்கப்படுத்தியமையினால் நான் மேற்கொண்ட நல்லவற்றுள் இந்த பாடநெறியும் ஒன்றாகும். இந்த பாடநெறியை சிறந்ததென சிபாரிசு செய்வதற்கு விரும்புகின்றேன்."*

பாதிமா இஸதீன்,
ஆசிரியர்,
பிரிட்டிஷ் கவுன்சில்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கலைமானி பட்டப் பாடநெறி உட்பட குறுகிய கால பாடநெறிகளுக்கு மேலதிகமாக செயலமர்வுகள் பொதுமக்களுக்கான விரிவுரைகள் போன்றவற்றுக்கும் இந்த நிறுவனத்தினால் அனுசரணை வழங்கப்பட்டது. இவற்றின் விபரங்கள் பின்வருமாறாகும்.

2017 **ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகள்**

| | **பாடநெறியின் பெயர்** | **காலப்பகுதி** | **மொழிமூலம்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை சமூகவியல், அரசியல் மற்றும் கலைகளின் கிராமிய கற்பனைத் திறன் பற்றிய ஆராய்ச்சி செயலமர்வு | 02 நாட்கள் (யூலை 14 - யூலை 15) | ஆங்கிலம் | 30 |
| 2 | இலங்கை பற்றிய கற்கை சம்பந்தமான அமெரிக்க நிறுவனம் அனுசரணை வழங்கும் மொழி மதிப்பீட்டுச் செயலமர்வு | 22மணி. (யூலை 25) | ஆங்கிலம் | 30 |
| 3 | எழுத்துமூல ஆலோசகர் களுக்கான அபிவிருத்தி செயலமர்வு | 2 மணி. (ஆகஸ்ட் 04) | ஆங்கிலம் | 17 |

2017 **ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அழைப்பின் பேரிலான விரிவுரைகள்** / **பிற செயற்பாடுகள்**

| | **செயலமர்வின் பெயர்** | **மொழிமூலம்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | "In Defense of EFL" Dr.Brooke Schreiber அவர்களினால் செய்யப்பட்ட பொதுமக்களுக்கான விரிவுரை | ஆங்கிலம் | 19 |
| 2 | ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சி துறை ஆய்வுக் கூட்டம் | ஆங்கிலம் | 35 |

2017 **ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள்**

| | **செயலமர்வின் பெயர்** | **காலப்பகுதி** | **மொழிமூலம்** | **மாணவர் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை சமூகவியல், அரசியல் மற்றும் கலைகளின் கிராமிய கற்பனைத் திறன் பற்றிய ஆராய்ச்சி செயலமர்வு | 02 நாட்கள் (யூலை 14 - யூலை 15) | ஆங்கிலம் | 30 |
| 2 | இலங்கை பற்றிய கற்கை சம்பந்தமான அமெரிக்க நிறுவனம் அனுசரணை வழங்கும் மொழி மதிப்பீட்டுச் செயலமர்வு | 22மணி. (யூலை 25) | ஆங்கிலம் | 30 |
| 3 | எழுத்துமூல ஆலோசகர் களுக்கான அபிவிருத்தி செயலமர்வு | 2 மணி. (ஆகஸ்ட் 04) | ஆங்கிலம் | 17 |

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம் 7,605,444/- ரூபாவாகும். 2017 ஆம் ஆண்டளவில் இது 54,247,485/- ரூபாவால் அதிகரித்தது.

(இ) **சவால்கள்**

தனது நிறுவன வரலாற்றுக் கலாப்பகுதிக்குள் முன்னேற்றத்திற்கு தடையாகவிருந்த பிரதான சவால்களில் ஒன்றான அதன் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திச் செல்லும் பொருட்டு அதற்காகவே ஒதுக்கப்பட்ட கட்டடமொன்றும் கற்பித்தல் மற்றும் கற்கும் வசதியில்லாமையையும் வெற்றிகரமாக தீர்த்துக் கொள்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இயலுமானது. 2016 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் புதிய நான்கு மாடி கட்டடத்தை பயன்படுத்துவதற்கு ஆரம்பித்ததோடு, 2017 ஆம் ஆண்டில் தளபாடங்கள், மின்உயர்த்தி, மின்பிறப்பாக்கி போன்ற சகல பிரதான கட்டடத் தேவைகளும் கொள்வனவு செய்யப்பட்டு தாபிக்கப்பட்டன.

ஆயினும், அழைப்பின் பேரிலான பதவியணியின் மீது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் தங்கியிருப்பது முக்கிய காரணியொன்றாகும். இது நாட்டின் சகல பட்டப்பின் படிப்பு நிறுவனங்களில் காணப்பட்ட நிலைமையாக இருந்த போதிலும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் சம்பந்தமாக இது விசேட விடயமொன்றாக அமைந்தது திறந்த பல்கலைக்கழகத்தின் மானிடவியல், சமூகவியல் பீடம், பிற தேசிய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும் போது சிறிய அளவாகையினாலும் இதன் காரணத்தினாலேயே ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு கொழும்பு மற்றும் அதற்கு அண்மித்த பிரதேசங்களில் அமைந்துள்ள தேசிய பல்கலைக்கழங்களில் தங்கியிருப்பதற்கு நேர்ந்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் அழைப்பின் பேரிலான பதவியணியினரை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் வரையறுக்கப்பட்டது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டில் மேலதிக கல்விப் பதவியணி பதவிகள் இரண்டு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் கோரிக்கையொன்று மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய வளங்கள், தரம் உட்பட அதன் மாணவர்களின் முன்னேற்றத்தில் காணப்படும் பண்பு என்பவற்றுக்கிடையில் நேரடி சம்பந்தம் நிலவுகின்றமையினால் மேலதிக பதவியணிக்கான கோரிக்கைகளை தொடர்ந்தும் செய்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் முகங்கொடுக்கவேண்டிய மற்றுமொரு சவாலானது தனது பண்பு மற்றும் வீச்செல்லையை விருத்தி செய்து கொள்வதாகும். தற்போது ஓரளவு வரையறுக்கப்பட்ட பிரிவினர் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் பற்றி அறிந்துகொண்டுள்ளதோடு, அதன் செயற்பாடு பற்றி யாவரும் அறிந்து கொள்ளும் வகையில் செயற்படுவது தேவையாயுள்ளது. இந்த பரந்துபட்ட வீச்செல்லை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிறுவன அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாகும். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய மற்றுமொரு துறையாவது அரசாங்கத்துறை அதேபோன்று தனியார்துறை ஆகிய இரண்டு துறைகளிலும் ஆங்கிலமொழி சார்ந்த பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் நிலவும் அதியுயர்ந்த போட்டி நிலைமையாகும். நாட்டின் ஆங்கிலமொழி கற்பதற்கான முன்னுரிமை வாய்ந்த பட்டப்பின் படிப்பு நிறுவனமொன்றாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வரலாற்றினை கவனத்திற் கொள்ளும் போது அதற்கென்று ஒரு தனி இடம் உள்ளது. ஆயினும், இந்த நிலைமையை நடாத்திச் செல்வது என்பது படைப்பு ரீதியிலான சிந்தனை மற்றும் இலங்கை ஆங்கில மொழி பற்றிய பட்டப்பின் படிப்பு கல்வியில் அதிகரித்து வரும் மாற்றங்களுக்கு நெகிழ்ச்சியடைவதற்கு எதிர்பார்க்கின்றது.

(ஈ) **எதிர்கால திட்டங்கள்**

அதன் தற்போதைய நிலைமையை உறுதி செய்து கொள்வதற்கும் அதேபோன்று நிறுவனத்தை பல்வகைமைப்படுத்தி விரிவுபடுத்துவதற்கும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திடம் பல திட்டங்கள் உள்ளன. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டத்தை மூன்று வழிகளில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மீண்டும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதாவது, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, எழுத்து மூலம் அல்லது செய்முறை மூலம் செய்யப்படும் கலைமானி பட்டம் மற்றும் ஆராய்ச்சி பிரிவுடன் கலைமானி பட்டம் என்பனவாகும். இந்த புதிய நெகிழ்ச்சிகரமான கட்டமைப்பின் மூலம் அவர்களுடைய பல்வேறுபட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு மாணவர்களுக்கு வசதிகள் செய்யப்படவுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டம் சார்பில் பதிவுசெய்து கொள்ளும் மாணவர்களினால் பிரதான ஆராய்ச்சி கருத்திட்டமொன்று உள்ளடக்கப்படாத கலைமானி பட்டத் தகைமை தற்போது கோரப்படுகின்றமையினால் எழுத்துமூலம் அல்லது செய்முறை மூலம் செய்யப்படும் கலைமானி பட்டத்தின் ஊடாக அவர்களுக்கு உயர்வான நெகிழ்ச்சியினை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. அதேபோன்று இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் மற்றும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் இலங்கை தகைமை வழிகாட்டல்களுக்கு அமைவாக பல்வகைமைப்படுத்தப்பட்டு வருகின்றது. நிறுவனத்தினால் வழங்கப்படும் முழுநேர மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையினை நான்காக உயர்த்தி 2018 ஆம் ஆண்டில் புதிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா இரண்டு சார்பில் மாணவர்களை பதிவு செய்து கொள்வதற்கும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் நியம அளவாக ஆராய்ச்சி வழிமுறை பற்றிய குறுகிய கால பாடநெறியொன்றை உள்ளடக்கி குறுகிய கால பாடநெறிகளை வழங்குவதற்கும் திட்டமிட்டுள்ளதோடு, அது சமூகவியல் மற்றும் மானிடவியல் பட்டப்பின் படிப்பில் அபிவிருத்தி அடைந்து வரும் துறையொன்றாக மாறும்.

நிருவாகம் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ தகவல் முறைமையொன்றுக்கான விருப்பத் தெரிவினை மதிப்பிடுவதற்கும் இந்த முறைமையின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பிக்கக்கூடிய விதத்தில் இந்த ஒப்பந்தங்களை வழங்குவதற்கும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி செயற்பாடுகளின் பகுதியொன்றாக ஈட்டப்பட்ட நிதியினை பயன்படுத்தி ஆகக்குறைந்தது நிருவாக பதவியணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கு அனுப்புவதற்கும் கூட திட்டமுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் முனைப்புடன் செயலாற்றும் மற்றுமொரு துறையாவது நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அரச சார்பற்ற மூலவளங்களிலிருந்து ஆராய்ச்சிக்கான நிதிகளைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியமாகும். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இதற்கு முன்னர் ஆராய்ச்சி கொடையொன்று பெற்றுக் கொள்ளப்படவில்லை. ஆதலால், 2018 ஆம் ஆண்டில் முனைப்புடன் ஆராயப்படும் துறையொன்றாக இது மாறியுள்ளது.

(உ) **உள்நாட்டு மாணவர்களின் விபரம்**

| **நிறுவனம்** | **பாடநெறி** | **மொழி** | 2017 **நுழைவு** | **முதலாம் ஆண்டு மாணவர் கள்** (**பகுதி** I) | **இரண்டாம் ஆண்டு மாணவர்கள்** (**பகுதி** II) | **பட்டம் பெற்றோரின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் | TESL கலைமானி பட்டம் | ஆங்கிலம் | புதிய நுழைவு - 14 (மீள பதிவு செய்யப்பட்டவர்கள் - 39) | - | - | 09 |
| | TESL கலைமானி பட்டம் / பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | ஆங்கிலம் | புதிய நுழைவு - 55 (மீள பதிவு செய்யப்பட்டவர்கள் - 80) | 97 | 38 | 04 |
| | இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய கலைமானி பட்டம் | ஆங்கிலம் | புதிய நுழைவு - 23 (மீள பதிவு செய்யப்பட்டவர்கள் - 35) | 39 | 19 | - |
| **மொத்தம்** | 03 | - | 246 | 136 | 57 | 13 |

(ஊ) **கல்விசார் பதவியணி பற்றிய தகவல்**

| **நிறுவனம்** | **விடயம்** | **மொழி மூலம்** | **சிரேட்ட பேராசிரியர்** | **பேராசிரியர்** | **சிரேட்ட விரிவுரையாளர்** | **விரிவுரையாளர்** | **தற்காலிக விரிவுரையாளர்** | **போதனாசிரியர்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் | | ஆங்கிலம் | - | 01 | 03 | - | 01 | 01* |
| **மொத்தம்** | | - | - | 01 | 03 | - | 01 | 01 |

* ஒப்பந்த அடிப்படையிலான போதனாசிரியர்

(எ) **கல்விசாரா பதவியணி பற்றிய தகவல்**

| நிறுவனம் | மிகச் சிரேட்ட | சிரேட்ட பதவியணி | கனிஷ்ட பதவியணி | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|
| ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் | - | 02 | 05 | 02 |
| **மொத்தம்** | - | 02 | 05 | 02 |

(ஏ) **ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் வெளியீடுகள் பற்றிய விபரம்**

| விடயம் | வெளியிடப்பட்டவை | வர்த்தகமயமாக்கப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 01 | - | 07 |
| ஆ. புதிய கண்டுபிடிப்புகள் | - | - | - |
| இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை | - | - | - |
| ஈ. நூல்களின் எண்ணிக்கை | 01 | - | - |
| உ. கடிதங்களின் எண்ணிக்கை | 01 | - | - |
| ஊ. பிற | - | - | - |

(ஐ) **நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் பட்டறைகள்**

| விடயம் | கலந்து கொண்டோர் | பூர்த்தி செய்தோர் | ஒழுங்கு செய்யப்பட்டவை |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | 02 |
| ஆ. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | - | - | 01 |
| இ. பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா எண்ணிக்கை | - | - | - |
| உ. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | 05 |
| ஊ. ஏனையவை | - | - | 04 |
| **மொத்தம்** | - | - | 12 |

(ஓ) 2017**ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குறுகிய கால பாடநெறி தொடர்பிலான விபரம்**

| | **பாடநெறியின் பெயர்** | **காலப்பகுதி** | **மொழிமூலம்** | **மாணவர் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | க.பொ.த (சா.த) புதிய பாடத் திட்டத்திற்கான ஆங்கிலமொழி இலக்கியம் கற்பித்தலில் ஆசிரியர்களின் ஆற்றலை மேம்படுத்தல் பற்றிய குறுகிய கால பாடநெறி | 22 மணி. (பெப்ரவரி 22 - ஏப்ரல் 05) | ஆங்கிலம் | 40 |
| 2 | சமூகவியல் மற்றும் மானிட வியல் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறி | 32 மணி. (மார்ச் 06 - மே 24) | ஆங்கிலம் | 30 |
| 3 | மேல் மாகாண கல்வித் திணைக் களத்தின் ஆங்கில மொழி பற்றிய ஆலோசகர் மற்றும் உதவிப் பணிப்பாளர்களுக்கான திறன் அபிவிருத்தி செயலமர்வு | 3 நாட்கள் (ஏப்ரல் 26 - 28) | ஆங்கிலம் | 49 |
| 4 | க.பொ.த (உ.த) ஆங்கிலமொழி இலக்கிய புதிய பாடத்திட்டம் பற்றிய குறுகிய கால பாடநெறி | 45 மணி. (செப்ரெம்பர் 11 - நவெம்பர் 20) | ஆங்கிலம் | 26 |
| 5 | சமூகவியல் மற்றும் மானிட வியல் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள் பற்றிய குறுகிய கால பாடநெறி | 32 மணி. (ஒக்ரோபர் - திசெம்பர்) | ஆங்கிலம் | 28 |

(ஓ) 2017 **ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள்**

| | **செயலமர்வின் பெயர்** | **காலப்பகுதி** | **மொழிமூலம்** | **மாணவர் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை சமூகவியல், அரசியல் மற்றும் கலைகளின் கிராமிய கற்பனைத் திறன் பற்றிய ஆராய்ச்சி செயலமர்வு | 02 நாட்கள் (யூலை 14 - யூலை 15) | ஆங்கிலம் | 30 |
| 2 | இலங்கை பற்றிய கற்கை சம்பந்தமான அமெரிக்க நிறுவனம் அனுசரணை வழங்கும் மொழி மதிப்பீட்டுச் செயலமர்வு | 22மணி. (யூலை 25) | ஆங்கிலம் | 30 |
| 3 | எழுத்துமூல ஆலோசகர் களுக்கான அபிவிருத்தி செயலமர்வு | 2 மணி. (ஆகஸ்ட் 04) | ஆங்கிலம் | 17 |

(ஔ) 2017 **ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அழைப்பின் பேரிலான விரிவுரைகள்** / **பிற செயற்பாடுகள்**

| | **செயலமர்வின் பெயர்** | **மொழிமூலம்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | "In Defense of EFL" Dr.Brooke Schreiber அவர்களினால் செய்யப்பட்ட பொதுமக்களுக்கான விரிவுரை | ஆங்கிலம் | 19 |

(க) **புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறி பற்றிய விபரம்**

| **நிறுவனம்** | **பாடநெறி** | **மொழி மூலம்** | **பட்டப்பின் படிப்பு சான்றிதழ்** | **பட்டப்பின் படிப்பு டிப்ளோமா** | **கலைமானி பட்டம்** | **தத்துவமானி பட்டம்** | **தத்துவ முதுமானி பட்டம்** |
|---|---|---|---|---|---|---|---|
| ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் | இரண்டாம் மொழி சூழ்நிலையில் இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது) | ஆங்கிலம் | - | **பட்டப்பின் படிப்பு டிப்ளோமா** (2018 **ஆம் ஆணடில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப் படவுள்ளது**) | - | - | - |
| | ஆங்கில மொழியை தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (பல்கலைக்கழகம் மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது) | | - | **பட்டப்பின் படிப்பு டிப்ளோமா** (2018 **ஆம் ஆணடில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப் படவுள்ளது**) | - | - | - |

## 3. பணிப்பாளரின் அறிக்கை

### முகாமைத்துவமும் நிருவாக முன்னேற்றமும்

(அ) நிருவாக பதவியணி உறுப்பினர்கள் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்த கொண்டனர்.

* பல்கலைக்கழக பதவியணியினருக்கான ஒழுக்காற்று நடவடிக்கை பற்றிய செயலமர்வு - ஒருவர் கலந்து கொண்டார்.

* களஞ்சிய முகாமைத்துவமும் கொள்வளவு வழிமுறையும் - ஒருவர் கலந்து கொண்டார்.

* புதிய சம்பளத் திருத்தமும் வேறு நிதி விடயங்களும் தொடர்பிலான செயலமர்வு - மூவர் கலந்து கொண்டனர்.

* பெறுகை மற்றும் வழங்கல் முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - ஒருவர் கலந்து கொண்டார்.

(ஆ) கல்விசார் பதவியணியினர் - தேசிய மற்றும் சருவதேச சம்மேளனங்கள் மற்றும் செயலமர்வுகளில் கலந்து கொண்டனர்.

* மொழி மற்றும் அபிவிருத்தி செயலமர்வு - பிரிட்டிஷ் கவுன்சில், டக்கார், செனகல், மேற்கு ஆபிரிக்கா

* தெற்காசிய இலக்கியத்தில் பயங்கரவாதத்தின் பங்களிப்பு, Northeastern Hill University (NEHU), சிலோங், அசாம், இந்தியா

* இலங்கை ஆங்கிலமொழி ஆசிரியர் சங்கத்தின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடாத்தப்படும் சருவதேச மாநாடு

* உயர் கல்வி, வினைத்திறமை மேம்பாட்டுக்கான இலங்கை சங்கத்தின் மாநாடு

* திறந்த, புத்தாக்க கல்வி பற்றிய (ICOIE 2017) சருவதேச மாநாடு, ஹொங்கொங், திறந்த பல்கலைக்கழகம்.

* கல்வியில் ஆராய்ச்சிக்கான அவுஸ்திரேலிய சங்கத்தின் மாநாடு, அவுஸ்திரேலியாவின் பிரதான அதிகார பிரதேசம்.

* "இலங்கையில் செயற்பட்டு ரீதியிலான ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்: சேர்ப்பதற்கும் சமூக ஒருங்கிணைப்புக்குமான பாதை" - பிரிட்டிஷ் கவுன்சில், கொழும்பு.

* சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க திட்டமிடல் செயலமர்வு - சமாதானம் பற்றிய ஆராய்ச்சி மற்றும் நல்லிணக்க பிரிவு, கல்வி அமைச்சு, பணடாரநாயக்க ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு

* உலக கல்வி ஆராய்ச்சி சங்கம் (WERA) - ஹொங்கொங் கல்வி பல்கலைக்கழகம், ஹொங்கொங்

பிரித்தானிய கவுன்சில், தேசிய கல்வி நிறுவனம், எடின்பேர்க் பல்கலைக்கழகம் மற்றும் லக்சம்பேர்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றினால்

ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வுகள் மற்றும் பட்டறைகளுக்கு கல்விசார் பதவியணியினர் கலந்து கொண்டமை.

(இ) 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திட்டப் பணிகள் இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆரம்ப திட்டமிடல் பணிகள் திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு, இதனை செயற்பாடு மற்றும் குழுக்களை கட்டியெழுப்பும் பொருட்டு வேலைநாளல்லாத வேறு ஒரு தினமாக திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஒருநாள் செயலமர்வின் போது 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திட்டத்தினை தயாரிப்பதன் மூலம் முன் கொண்டு செல்லப்பட்டது.

(ஈ) பின்வரும் கட்புலனாகா / கட்புலன் சொத்துக்களை கொள்வனவு செய்யும் பொருட்டு கேள்வி ஆவணங்கள் மற்றும் தகவுத் திறன்களைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை இனங்காணும் பொருட்டு கலந்துரையாடல்கள் மற்றும் ஆரம்ப கட்ட தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன (2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படவுள்ளவை)

* முகாமைத்துவ தகவல் முறைமை

* மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் விருத்தியும் - கூரை, வாகனத் தரிப்பிடம் மற்றும் சேவை பிரதேசம் .

(உ) புதிய கட்டடங்கள் சார்ந்த செயற்பாடுகள்

புதிய கட்டடத்தில் நிலவும் குறைபாடுகள் மற்றும் இந்த குறைபாடுகளை சீர்செய்து கொள்வதில் காணப்படும் காலதாமதம் தொடர்பில் அறிவிக்கும் பொருட்டு ஒப்பந்தக்காரர்களுக்கும் உயர் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் கட்டடக்குழுக் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பல மேற்கொள்ளப்பட்டன.

(ஊ) 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரித்தல்

ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

14. **காசு ஓட்டக்கூற்று**

“நேரடியற்ற முறைகள்" என்பதனைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்துறை கணக்கிடல் தரம் 2 (SLPSAS 2) இற்கு அமைவாக காசு ஓட்டக்கூற்றானது தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவம்
## நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கான குறிப்புகள்

**குறிப்பு** - 01

| **வங்கியிலுள்ள பணம்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174100 156 838310 | 252,645 | 418,679 |
| மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174100 246 838310 | (902,000) | 3,960,318 |
| மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174100 336 838310 | 123,950 | 14,006,732 |
| மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174200 226 838310 | 9,941,809 | - |
| மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 174200 136 838310 | 2,003,958 | - |
| | 11,420,362 | 18,385,728 |

**குறிப்பு** - 02

| **பதவியணி கடன்களும் முற்பணமும்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| இடர் கடன் | 1,182,477 | 896,628 |
| வாகன கடன் | 30,900 | 70,900 |
| விசேட முற்பணம் | 500 | 500 |
| விழா முற்பணம் | 2,500 | 5,300 |
| | 1,216,377 | 973,328 |

**குறிப்பு** - 03

| **மாணவர்களிடமிருந்து வரவேண்டியுள்ள வருமானம்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| வரவேண்டிய பாடநெறி கட்டணம் | 72,000 | 72,000 |
| வரவேண்டிய மேலதிக வகுப்புக் கட்டணம் - TESL | 3,558,275 | 2,484,025 |
| வரவேண்டிய வகுப்புக் கட்டணம் - TLSC | 674,400 | 286,500 |
| வரவேண்டிய குறுகியகால பாடநெறிக் கட்டணம் | 541,918 | 259,827 |
| வரவேண்டிய ஆய்வுக் கட்டுரை கட்டணம் - TESL | 70,200 | - |
| வரவேண்டிய பரீட்சைக் கட்டணம் - TESL | 120,000 | - |
| வரவேண்டிய பரீட்சைக் கட்டணம் - TLSC | 28,860 | 12,480 |

| | 5,065,653 | 3,114,832 |
|---|---|---|

**குறிப்பு** - 04

| **குறுகியகால முதலீடு** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 43,000,000 | 61,494,422 |
| ஆண்டினுள் மீளப்பெறல் - நிலையான வைப்பு | - | (7,718,522) |
| ஆண்டினுள் மீளப்பெறல் - வங்கி கொடுக்கல் வாங்கல் | (19,100,400) | (10,775,900) |
| புதிய முதலீடு - வங்கி கொடுக்கல் வாங்கல் | 22,861,864 | - |
| | 46,761,464 | 43,000,000 |

**குறிப்பு** - 05

| **முற்கொடுப்பனவுகளும் வரவேண்டியவையும்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| முற்கொடுப்பனவு | 36,146 | 23,770 |
| | 36,146 | 23,770 |

**குறிப்பு** 06

**நடைமுறைசாரா சொத்துக்கள்**

| | **தளபாடங்களும் பொருத்துகைகளும்** | **அலுவலக உபகரணங்கள்** | **கணனி மற்றும் துணைக் கருவிகள்** | **நூலகப் புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும்** | **பொறித் தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்** | **துவிச்சக்கர வண்டி** | **பட்டமளிப்பு விழா மேலங்கி** | **பிற சொத்துக்கள்** | **காணி மற்றும் கட்டடம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | | | | | | |
| 2017-01-01 **இற்கான நிலுவை** | 2,500,288 | 3,721,463 | 2,113,051 | 2,570,953 | - | 10,700 | 21,000 | 46,607 | 90,400,694 | 101,384,755 |
| (+) ஆண்டில் கொள்வனவு | 2,537,671 | 2,027,574 | 5,640,786 | 211,280 | 7,878,631 | - | - | 20,850 | 1,190,330 | 19,507,122 |
| (-) மீள் மதிப்பீட்டு மாற்றல் | (2,500,288) | (3,721,463) | (2,113,051) | - | - | (10,700) | - | - | - | - |
| (-) ஆண்டில் பராதீனப்படுத்தல் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2017-12-31 **இற்கான நிலுவை** | 2,537,671 | 2,027,574 | 5,640,786 | 2,782,233 | 7,878,631 | - | 21,000 | 67,457 | 91,591,024 | 112,546,376 |
| **பெறுமானத் தேய்வு** | | | | | | | | | | |
| 2017-01-01 **இற்கான நிலுவை** | 471,600 | 2,084,653 | 1,686,299 | 1,960,453 | - | 8,472 | 11,288 | 25,845 | 2,257,979 | 8,506,587 |
| (+) சீராக்கல் | - | 75,116 | - | - | - | - | - | - | - | 75,116 |
| (+) ஆண்டின் பெறுமானத் தேய்வு | 141,326 | 218,240 | 153,217 | 228,077 | 137,953 | - | 4,200 | 11,263 | 4,528,112 | 5,422,387 |
| (-) மீள் மதிப்பீட்டு மாற்றல் | (471,600) | (2,159,769) | (1,686,299) | - | - | (8,472) | - | - | - | (4,326,140) |
| 2017-12-31 **இற்கான நிலுவை** | 141,325 | 218,240 | 153,217 | 2,188,529 | 137,953 | - | 15,488 | 37,108 | 6,786,090 | 9,677,951 |
| 2016-01-01 **புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட தேறிய பெறுமதி** | 2,028,688 | 1,636,809 | 426,753 | 610,501 | - | 2,228 | 9,712 | 20,762 | 88,142,715 | 92,878,168 |
| 2016-12-31 **புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட தேறிய பெறுமதி** | 2,396,346 | 1,809,335 | 5,487,569 | 593,704 | 7,740,678 | - | 5,512 | 30,348 | 84,804,933 | 102,868,425 |

| | தளபாடங்களும் பொருத்துகைகளும் | அலுவலக உபகரணங்கள் | கணனி மற்றும் துணைக் கருவிகள் | துவிச்சக்கர வண்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **மீள் மதிப்பீடு** | | | | | |
| 2017-01-01 **இற்கான நிலுவை** | 820,100 | 606,850 | 158,450 | 5,000 | 1,590,400 |
| (+) ஆண்டில் கொள்வனவு | - | - | - | - | - |
| 2017-12-31 **இற்கான நிலுவை** | 820,100 | 606,850 | 158,400 | 5,000 | 1,590,400 |
| **பெறுமானத் தேய்வு** | | | | | |
| 2017-01-01 **இற்கான நிலுவை** | - | - | - | - | - |
| (+) ஆண்டின் பெறுமானத் தேய்வு | 82,010 | 121,370 | 31,690 | 1,000 | 236,070 |
| (-) மீள் மதிப்பீட்டு மாற்றல் | - | - | - | - | - |
| 2017-12-31 **இற்கான நிலுவை** | 82,010 | 121,370 | 31,690 | 1,000 | 236,070 |
| 2016-01-01 **புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட தேறிய பெறுமதி** | 820,100 | 606,850 | 158,450 | 5,000 | 1,590,400 |
| 2016-12-31 **புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட தேறிய பெறுமதி** | 738,090 | 485,480 | 126,760 | 4,000 | 1,354,330 |

**குறிப்பு** - 07

| **கட்புலனாகா சொத்துக்கள்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| கணனி மென்பொருள் | 590,000 | - |
| ஆண்டில் இலதாக்கல் | 107,008 | - |
| | 482,992 | - |

**குறிப்பு** - 08

| **அட்டுறு செலவுகள்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணம் | 125,000 | 125,000 |
| 2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணம் | 150,000 | 150,000 |
| 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணம் | 140,000 | 140,000 |
| 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணம் | 150,000 | - |
| தொலைத்தொடர்பு கட்டணம் | 18,220 | 22,478 |
| மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு | 25,125 | 20,957 |
| வெளிவாரி விரிவுரையாளர்களுக்கான கட்டணம் | 15,000 | 22,500 |
| பொழுதுபோக்குச் செலவுகள் | 9,491 | - |
| முத்திரைக் கட்டணமும் உழைக்கும்போது செலுத்தும் வரியும் | 2,175 | 1,775 |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 383,670 | 383,670 |
| பிற செலுத்த வேண்டியவை | 113,045 | 50,000 |
| பாதுகாப்புச் சேவைகள் | 44,563 | 192,034 |
| விரிவுரைக் கட்டணம் - ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் | 290,000 | 22,500 |
| துப்பரவேற்பாட்டுச் சேவை | 66,018 | 131,837 |
| | 1,532,306 | 1,262,751 |

**குறிப்பு** - 09

| **சிறு கடன் கொடுத்தோர்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| திறந்த பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டியது | 92,117 | 40,128 |
| Softlogic Information Technologies | 15,792 | 15,792 |
| Haleys Industril | 344,883 | - |
| Metropolitan Engineering | 2,412,700 | - |
| Leema Creation | 2,565 | - |
| Expograpics (Pvt) Ltd | 6,804 | - |
| | 2,875,061 | 55,920 |

**குறிப்பு** - 10

| **முன்னதாகவே கிடைத்த மாணவர்களின் கட்டணம்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| முன்னதாகவே கிடைத்த மேலதிக வகுப்புக் கட்டணம் TESL | 2,479,925 | 1,930,200 |
| முன்னதாகவே கிடைத்த மேலதிக வகுப்புக் கட்டணம் TLSC | 1,021,800 | - |
| முன்னதாகவே கிடைத்த ஆய்வுக்கட்டுரை கட்டணம் | 4,111 | 150,059 |
| முன்னதாகவே கிடைத்த பதிவுக் கட்டணம் TESL | 140,550 | 119,475 |
| முன்னதாகவே கிடைத்த பதிவுக் கட்டணம் TLSC | 28,300 | 6,400 |
| முன்னதாகவே கிடைத்த மேலதிக கட்டணம் TESL | 900,450 | 79,650 |
| முன்னதாகவே கிடைத்த மேலதிக கட்டணம் TLSC | 21,000 | 4,800 |
| முன்னதாகவே கிடைத்த குறுகியகால பாடநெறிக் கட்டணம் | - | 20,000 |
| | 3,786,136 | 2,310,584 |

**குறிப்பு** - 11

| **பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடுகள்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 1,157,113 | 651,625 |
| ஆண்டினுள் பணிக்கொடை கொடுப்பனவுகள் | - | - |
| ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் | 546,517 | 505,488 |
| | 1,703,630 | 1,157,113 |

**குறிப்பு** - 12

| **செலவு செய்யப்பட்ட மூலதனக் கொடை** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 92,911,215 | 47,972,392 |
| மூலதனச் செலவு | 20,265,122 | 46,346,778 |
| நடப்பாண்டுக்கான இலதாக்கல் | (5,633,157) | (1,407,955) |
| | 107,543,180 | 92,911,215 |

**குறிப்பு** - 13

| செலவு செய்யப்படாத மூலதனக் கொடை | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 35,829,434 | 44,676,212 |
| திறைசேரியிலிருந்து கிடைத்த நன்கொடை | 1,625,000 | 37,500,000 |
| மூலதனச் செலவு | (20,265,122) | (46,346,778) |
| | 17,189,312 | 35,829,434 |

**குறிப்பு** - 14

| **வட்டி வருமானம்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| வட்டி வருமானம் - சேமிப்புக் கணக்குகள் | 22,342 | - |
| நிலையான வைப்புகளுக்கான வட்டி | - | 16,798 |
| வங்கி நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த வட்டி | 4,548,366 | 3,383,464 |
| பதவியணியிருக்கு வழங்கிய கடன் மற்றும் முற்பணம் தொடர்பிலான வட்டி | 41,283 | 31,582 |
| | 4,611,991 | 3,431,844 |

**குறிப்பு** - 15

| தனிப்பட்ட வேதனாதிகள் | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| **கல்வி** | | |
| **சம்பளங்களும் ஊதியங்களும்** | | |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 2,542,144 | 1,613,294 |
| பல்கலைக்கழக சேமலாப நிதியம் | 404,010 | 307,862 |
| பல்கலைக்கழக ஓய்வூதியம் | 461,725 | 299,024 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 3% | 173,147 | 122,422 |
| வெளிவாரி விரிவுரையாளர்களுக்கான கட்டணம் | 841,250 | 855,650 |
| ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் கட்டணம் | 290,000 | 22,500 |
| | 4,712,276 | 3,220,752 |
| **பிற படிகள்** | | |
| கல்விப் படி | 2,624,384 | 2,135,963 |
| ஆராய்ச்சிப் படி | 599,254 | 623,707 |
| வாழ்க்கைச்செலவுப் படி | 343,200 | 296,400 |
| விசேட படி | - | 322,659 |
| மேலதிகப் படி | 689,016 | 322,659 |
| உபசரிப்பு படி | 113,460 | 81,170 |
| சீராக்கல் படி | 633,316 | - |
| இடைக்காலப் படி | - | 380,000 |
| ஏனைய படிகள் | 600,000 | 360,000 |
| | 5,602,630 | 4,522,558 |
| | | |
| தனிப்பட்ட சம்பளங்களும் படிகளும் – கல்வி | 10,314,906 | 7,743,310 |

**கல்விசாரா**

| | 2017 (ரூபா) | 2016 (ரூபா) |
|---|---|---|
| **சம்பளங்களும் ஊதியங்களும்** | | |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 2,432,719 | 1,720,579 |
| பல்கலைக்கழக சேமலாப நிதியம் | 316,753 | 205,086 |
| பல்கலைக்கழக ஒய்வூதியம் | 228,162 | 150,298 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 3% | 109,224 | 71,077 |
| பதில் கடமைக்கான கொடுப்பனவு | 200,000 | - |
| | 3,286,789 | 2,147,040 |
| **பிற படிகள்** | | |
| ஆராய்ச்சிப் படி | 141,729 | 80,389 |
| வாழ்க்கைச்செலவுப்படி | 667,940 | 648,649 |
| விசேடப்படி | - | 344,116 |
| மேலதிகப் படி | 29,013 | 344,116 |
| இடைக்காலப்படி | - | 831,602 |
| MCA | 615,554 | 344,116 |
| சீராக்கல் படி | 45,835 | - |
| | 1,500,071 | 2,592,958 |
| தனிப்பட்ட சம்பளங்களும் படிகளும் - கல்விசாரா | 4,786,629 | 4,740,028 |

| | | |
|---|---|---|
| **மேலதிகவேலைநேரக் கொடுப்பனவும் விடுமுறைத்தின கொடுப்பனவு** | | |
| மேலதிகவேலைநேரக் கொடுப்பனவு | 276,704 | 167,129 |
| விடுமுறை தின கொடுப்பனவு | 38,419 | 10,124 |
| | 315,123 | 177,253 |
| மொத்த தனிப்பட்ட சம்பளங்களும் படிகளும் | 15,416,918 | 12,660,591 |

**குறிப்பு** - 16

| பிரயாணச் செலவு | 2017 (ரூபா) | 2016 (ரூபா) |
|---|---|---|
| உள்நாடு | 94,331 | 70,314 |
| | 94,331 | 70,314 |

**குறிப்பு** - 17

| வழங்கல்களும் நுகர்வுப் பொருட்களும் | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| எழுதுகருவி வகைகளும் அலுவலகத் தேவைகளும் | 699,900 | 552,888 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 229,600 | 210,600 |
| பொறியியல் மற்றும் மின்சார உபகரணங்கள் | 4,900 | 10,663 |
| சீருடை | 1,800 | 4,973 |
| பிற வழங்கல்கள் | 38,709 | 8,221 |
| | 974,909 | 787,345 |

**குறிப்பு** - 18

| பராமரிப்புச் செலவு | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| பொறித்தொகுதி, இயந்திரசாதனங்கள் | 238,931 | 131,837 |
| கட்டடங்களும் நிருமாணிப்புகளும் | 19,577 | 24,814 |
| பிற பராமரிப்புச் செலவுகள் | 1,840 | 290 |
| | 260,348 | 156,944 |

**குறிப்பு** - 19

| **ஒப்பந்த சேவைகள்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| துப்பரவேற்பாட்டுச் செலவுகள் | 294,350 | 131,837 |
| பாதுகாப்பு சேவை | 378,152 | 192,259 |
| தபால் கட்டணம் | 78,910 | 80,055 |
| தொலைத்தொடர்பு | 186,395 | 209,690 |
| மின்சாரம் | 10,153 | 89,217 |
| நீர் | 8,741 | 19,420 |
| அச்சு விளம்பரம் | 497,908 | 132,351 |
| | 1,454,608 | 854,828 |

**குறிப்பு** - 20

| **பிற மீண்டுவரும் செலவினம்** | 2017 (**ரூபா**) | 2016 (**ரூபா**) |
|---|---|---|
| முத்திரைத் தீர்வை | 4,900 | 3,025 |
| விசேட சேவைகள் - பீடசபை குழு | 717,971 | 670,777 |
| தொழில்சார்பாளர்கள், பிற கட்டணம் | 10,000 | 140,000 |
| பட்டறைகளும் செயலமர்வுகளும் | 167,901 | 167,612 |
| பதவியணி காப்புறுதி | 28,278 | 16,843 |
| பதவியணி விருத்தி | 109,000 | 74,000 |
| பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான பிரயாணச் செலவு | 137,500 | - |

| | | |
|---|---|---|
| விடுமுறை ஆணைச்சீட்டுக்களும் பருவகால சீட்டுக்களும் | 8,550 | - |
| களியாட்ட செலவுகள் | 129,462 | 35,566 |
| வங்கிக் கட்டணம் | 25,539 | 14,829 |
| பங்களிப்புத் தொகையும் உறுப்புரிமைக் கட்டணமும் | 35,500 | 24,371 |
| பரீட்சைக் கட்டணம் | 272,400 | 179,985 |
| குறுகியகால பாடநெறி செலவுகள் | 1,352,435 | 54,401 |
| ஊழியர் நலனோம்பல் | - | 5,000 |
| ஆதன கடன் வட்டி | 93,910 | - |
| பிற | 1,787,616, | 885,703 |
| | 4,880,962 | 2,273,112 |

| | கணக்கின் பெயர் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 111001 | மூலதன கொடை - செலவு செய்யப்பட்டவை | | 107,543,180 |
| 111007 | செலவு செய்யப்படாத மூலதனக் கொடை - கட்டடம் | | 3,672,322 |
| 111008 | செலவு செய்யப்படாத மூலதனக் கொடை - புத்தகங்கள் | | 2,917,767 |
| 111009 | செலவு செய்யப்படாத மூலதனக் கொடை - பொறித்தொகுதி | | 10,142,224 |
| 111011 | செலவு செய்யப்படாத மூலதனக் கொடை - மனிதவளம் | | 257,000 |
| 111010 | செலவு செய்யப்படாத மூலதனக் கொடை - புனரமைப்பு | | 200,000 |
| | **மூலதன நன்கொடை இலதாக்கல்** | | 5,633,157 |
| 121005 | ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது ஒதுக்கம் | | 18,511,383 |
| 122001 | பணிக்கொடை நிதி ஏற்பாடுகள் | | 1,703,630 |
| 161004 | தேக்கி வைத்தல் - நிருமாணிப்பு | | 2,011,359 |
| 161008 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - செலுத்த வேண்டிய கணக்கு | | 92,317 |
| 162001 | திரண்ட செலவு | | 1,532,306 |
| 162002 | சிறு கடன் கொடுத்ததோர் | | 2,782,744 |
| 166011 | ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அபிவிருத்தி நிதியம் | | 3,967,500 |
| 168100 | 1 கிடைக்கப்பெற்ற வகுப்பு கட்டணம் - TESL | | 2,479,925 |
| 168100 | 3 கிடைக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரை கட்டணம் | | 4,111 |
| 168100 | 5 கிடைக்கப்பெற்ற மேலதிக கட்டணம் | | 90,450 |
| 168100 | 6 கிடைக்கப்பெற்ற பதிவுக் கட்டணம் | | 140,550 |
| 168200 | 1 கிடைக்கப்பெற்ற வகுப்புக் கட்டணம் - TL | | 1,021,800 |
| 168200 | 4 கிடைக்கப்பெற்ற மேலதிக கட்டணம் | | 21,000 |
| 168200 | 5 கிடைக்கப்பெற்ற பதிவுக் கட்டணம் | | 28,300 |
| 210102 | மூலதன வடிவத்திலான கட்டடங்கள் | 91,591,024 | |
| 210201 | அலுவலக தளபாடங்கள் | 2,537,671 | |
| 210202 | அலுவலக உபகரணங்கள் | 2,027,574 | |
| 210207 | பட்டமளிப்பு விழா மேலங்கி, மாலை | 21,000 | |
| 210210 | புத்தகங்களும் பருவ சஞ்சிகைகளும் | 2,782,233 | |
| 210213 | இயந்திர சாதனங்களும் பொருத்துகைகளும் | 7,878,631 | |
| 210225 | கணனி மற்றும் துணைக் கருவிகள் | 5,640,486 | |
| 210226 | பிற சொத்துக்கள் | 67,457 | |
| 210227 | கணனி மென்பொருள் | 482,992 | |
| 210228 | சொத்துக்களை மீள மதிப்பிடுதல் | 1,590,400 | |
| 210229 | நிலுவைக் கணக்குகளை மீண்டும் மதிப்பிடுதல் | 2,428,962 | |

| | | | |
|---|---|---|---|
| 210306 | மனிதவள மூலதன அபிவிருத்தி | 168,000 | |
| 221001 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - கட்டடம் | | 6,786,090 |
| 221002 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - அலுவலக உபகரணங்கள் | | 339,610 |
| 221003 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - தளபாடங்கள் | | 223,335 |
| 221008 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் | | 137,953 |
| 221010 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும் | | 2,188,529 |
| 221011 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - பட்டமளிப்பு விழா மேலங்கி, மாலை | | 15,488 |
| 221014 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - கணனி மற்றும் துணைக் கருவிகள் | | 184,907 |
| 221015 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - பிற சொத்துக்கள் | | 37,108 |
| 221016 | கல்வி பிரிவுக்கான நிதி ஏற்பாடுகள் - துவிச்சக்கர வண்டி | | 1,000 |
| 231000 | 2 மக்கள் வங்கி, நுகேகொடை 174100156838310 | 252,645 | |
| 231000 | 3 மக்கள் வங்கி, நுகேகொடை 174100246838310 | | 902,000 |
| 231000 | 4 மக்கள் வங்கி, நுகேகொடை 174100336838310 | 123,950 | |
| 231000 | 5 மக்கள் வங்கி, நுகேகொடை 17420022683 | 9,941,809 | |
| 231000 | 6 மக்கள் வங்கி, நுகேகொடை 17420013683 | 2,003,958 | |
| 235004 | முன்னர் செலுத்தப்பட்டவை | 36,146.23 | |
| 235100 | 1 கிடைக்கப்பெறவேண்டிய வகுப்பு கட்டணம் - TESL | 3,558,275 | |
| 235100 | 2 கிடைக்கப்பெறவேண்டிய பட்டியல் கட்டணம் - T | 72,000 | |
| 235100 | 3 கிடைக்கப்பெறவேண்டிய ஆய்வுக் கட்டுரை கட்டணம் | 541,918 | |
| 235100 | 4 கிடைக்கப்பெறவேண்டிய பரீட்சைக் கட்டணம் | 120,000 | |
| 235200 | 1 கிடைக்கப்பெறவேண்டிய வகுப்புக் கட்டணம் - TLS | 674,400 | |
| 235200 | 2 கிடைக்கப்பெறவேண்டிய ஆய்வுக் கட்டுரை கட்டணம் | 70,200 | |
| 235200 | 3 கிடைக்கப்பெறவேண்டிய பரீட்சைக் கட்டணம் | 28,860 | |
| 236001 | இடர் கடன் | 1,182,477 | |
| 236004 | வாகனக் கடன் | 30,900 | |
| 236006 | விசேட முற்பணம் | 500 | |
| 236007 | விழா முற்பணம் | 2,500 | |
| 2396 | முதலீடு - வங்கி நடவடிக்கைகள் | 46,761,464 | |
| 2398 | பொருட்பதிவேடு | 313,296 | |
| 3101 | திரண்ட செலவுகளுக்கான திறைசேரி கொடை | | 18,727,098 |
| 31010 | சேமிப்புகள் மீதான வட்டி | | 22,342 |

| | | | |
|---|---|---|---|
| 3107 | மூதலீட்டின் மீதான வட்டி - வங்கி நடவடிக்கைகள் | | 4,548,366 |
| 3108 | கடன் மீதான வட்டி | | 41,283 |
| 3113 | பல்வேறுபட்ட வருமானம் | | 65,560 |
| 3118 | கேள்வி கட்டணம் | | 36,000 |
| 3138 | முன்னர் கிடைத்த வட்டி | | 288,404 |
| 320101 | TESL வகுப்புக் கட்டணம் | | 4,892,025 |
| 320102 | TESL பதிவுக் கட்டணம் | | 165,525 |
| 320103 | TESL மேலதிக் கட்டணம் | | 109,800 |
| 320104 | TESL பரீட்சைக் கட்டணம் | | 269,850 |
| 320105 | TESL ஆய்வுக் கட்டுரை கட்டணம் | | 1,259,039 |
| 320106 | TESL பட்டியல் கட்டணம் | | 72,000 |
| 320107 | TESL விண்ணப்பக் கட்டணம் | | 167,000 |
| 320201 | TLSC வகுப்புக் கட்டணம் | | 2,556,450 |
| 320202 | TLSC பதிவுக் கட்டணம் | | 64,000 |
| 320203 | TLSC மேலதிக் கட்டணம் | | 48,000 |
| 320204 | TLSC பரீட்சைக் கட்டணம் | | 95,940 |
| 320205 | TLSC ஆய்வுக் கட்டுரை கட்டணம் | | 117,000 |
| 320206 | TLSC விண்ணப்பக் கட்டணம் | | 66,000 |
| 320301 | குறுகிய பாடநெறி | | 3,076,400 |
| 320401 | தத்துவமானி பட்ட பாடநெறி விண்ணப்பம் மற்றும் பிரேரிப்புகள் | | 69,000 |
| 410104 | தனிப்பட்ட வேதனாதிகள் - கல்வி | | |
| | 4101 சம்பளங்களும் ஊதியங்களும் | 2,542,144 | |
| | 4102 பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியம் | 404,010 | |
| | 4103 ஓய்வூதியம் | 461,725 | |
| | 4104 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 173,147 | |
| | 4105 பதிற்கடமைக்கான கொடுப்பனவுகள் | 200,000 | |
| | 4107 ஆராய்ச்சிப் படி | 599,254 | |
| | 4108 கல்விப் படி | 2,624,384 | |
| | 4110 பிறபடிகள் | 600,000 | |
| | 4111 வெளிவாரி விரிவுரையாளர்களுக்கான கட்டணம் | 841,250 | |
| | 4112 பணிக்கொடை | 546,517 | |
| | 4114 ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் கட்டணம் | 290,000 | |
| | 4120 வாழ்க்கைச் செலவுபடி | 343,200 | |
| | 4122 மேலதிக படி | 689,016 | |
| | 4123 சீராக்கல்படி | 633,316 | |
| 410104 | தனிப்பட்ட வேதனாதிகள் - கல்வி | | |

| | | |
|---|---|---|
| | 4201 சம்பளங்களும் ஊதியங்களும் | 2,432,719 |
| | 4202 பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியம் | 316,753 |
| | 4203 ஓய்வூதியம் | 228,162 |
| | 4204 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 109,224 |
| | 4207 ஆராய்ச்சிப் படி | 141,729 |
| | 4208 மேலதிகப் படி | 276,704 |
| | 4209 விடுமுறைகளுக்கான கொடுப்பனவு | 38,419 |
| | 4210 பிறபடிகள் | - |
| | 4220 வாழ்க்கைச் செலவுபடி | 667,940 |
| | 4221 MCA | 615,554 |
| | 4222 மேலதிக படி | 29,013 |
| | 4223 சீராக்கல்படி | 45,835 |
| 410105 | போக்குவரத்து மற்றும் விநியோகம் | |
| | 501 உள்நாடு | 94,331 |
| 410106 | விநியோகம் | |
| | 601 எழுதுகருவி வகைகளும் அலுவலகத் தேவைகளும் | 699,900 |
| | 602 எரி பொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் | 229,600 |
| | 603 சீருடை மற்றும் தையல் கூலி | 1,800 |
| | 604 இயந்திர மற்றும் மின்னணு உபகரணங்கள் | 4,900 |
| | 607 பிற விநியோகம் | 38,709 |
| 410107 | பராமரிப்பு | |
| | 701 வாகனம் | 1,840 |
| | 702 இயந்திரம், இயந்திர சாதனங்கள் , கருவிகள் | 238,931 |
| | 703 கட்டடங்களும் பொருத்துகைகளும் | 19,577 |
| 410108 | ஒப்பந்த சேவைகள் | |
| | 802 தொலைத்தொடர்புகள் | 176,005 |
| | 803 அஞ்சல் கட்டணம் | 89,300 |
| | 804 மின்சாரம் | 10,153 |
| | 805 பாதுகாப்பு சேவை | 378,152 |
| | 806 நீர் | 8,741 |
| | 807 சுத்திகரிப்பு சேவை | 294,350 |
| | 810 அச்சு மற்றும் விளம்பரம் | 497,908 |
| 410109 | பிற திரண்ட செலவுகள் | |
| | 901 பல்கலைக்கழகத்திற்கு பிரயாண கொடை | 137,500 |
| | 902 விசேட சேவைகள் - பீட சபை | 717,971 |
| | 903 விசேட சேவைகள் - தொழில் | 10,000 |

| | | | |
|---|---|---|---|
| | 904 செயலமர்வுகள், மாநாடுகள் | 167,901 | |
| | 906 பதவியணி விருத்தி | 109,000 | |
| | 907 பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி | 30,785 | |
| | 915 பருவகால சீட்டு | 8,550 | |
| | 916 பொழுதுபோக்கு செலவு | 242,922 | |
| | 917வங்கிக் கட்டணம் | 25,539 | |
| | 919 உறுப்புரிமை கட்டணம் | 35,500 | |
| | 921 பரீட்சை செலவு | 272,400 | |
| | 922 பிற - பத்திரிகை , சஞ்சிகை | 1,606,832 | |
| | 925 சொத்துக் கடன்களுக்கான வட்டி | 93,910 | |
| | 926 முத்திரை கட்டணம் | 4,900 | |
| | 927 பதவியணி காப்புறுதி காப்பீடு | 28,278 | |
| | 929 கணக்காய்வுக் கட்டணம் | 150,000 | |
| | 930 மீள மதிப்பிடல் நட்டம் - சொத்து மற்றும் காணிகள் | - | |
| | 931 கட்புலனாகா சொத்துக்கள் இலதாக்கல் | 107,008 | |
| 410118 | சொத்துக்களின் தேய்மானம் | 5,658,457 | |
| 490101 | குறுகிய பாடநெறி செலவுகள் | 1,352,435 | |
| | | 212,326,127 | 212,326,127 |

7. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } எச்ஈடீ/ஜீ/பீஜீஜஈ/1/17

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 செப்டெம்பர் 28

பணிப்பாளர்,
ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்

**ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஆங்கிலப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(அ) நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் நூற்றுக்கு நூறு தேய்மானத்திற்குள்ளாகிய சொத்துக்களது நியாயமான பெறுமதியை மீள மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமாயினும், நிறுவகம் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாக்கிய ரூபா 479,508 கிரயமுடைய புத்தகங்களிலும் சஞ்சிகைகளிலும் மேலும் பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றின் நியாயபூர்வமான பெறுமதி (Fair Value) யை கணக்குகளில் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) நியமத்தின் 86 ஆம் பந்தியின் பிரகாரம் சகல நிலையான சொத்துக்களதும் வருடாந்த தேய்மான வீதம் தெரியப்படுத்தப்பட வேண்டுமாயினும், நிறுவகத்தின் பொறித்தொகுதியும் இயந்திர சாதனங்களதும் (Plant and Machinery) தேய்மான வீதம் அவ்வாறு தெரியப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான திறைசேரி உண்டியல் முதலீட்டுப் பெறுமதி ரூபா 46,761,464 ஆகும். பட்டோலைகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 47,031,800 ஆகியமையால் விளக்கமளிக்கப்படாத ரூபா 270,336 வித்தியாசம் நிலவியது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX அத்தியாயத்தினது 3.1 ஆம் பிரிவு | நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினர் வருவதையும் செல்வதையும் உறுதி செய்வதற்கான வரவு இடாப்பு பேணப்படவில்லை. வருவதை உறுதி செய்யாது 2017 ஆம் ஆண்டின்போது சம்பளமும் படியுமாக வழங்கப்பட்ட தொகை ரூபா 9,183,656 ஆகும். |
| (ஆ) 2011 சனவரி 27 ஆந் திகதிய PED/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | எந்தவொரு அரச நிறுவனத்திலும் மிகையான நிதி இருப்பின் எதிர்வரும் 06 மாதங்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத் தேவைக்கு அதிகமாக உள்ள தொகையைத் தவிர எஞ்சியவற்றை திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. |

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 10,110,775 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,584,286 ஆவதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 6,526,489 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தில் ஏற்பட்ட ரூபா 6,541,098 அதிகரிப்பே மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 3,413,496 ஆகவிருந்த மிகை 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,400,723 வரை நலிவடைந்திருந்ததுடன், அதன் பின்னர் தொடர்ந்து அதிகரித்தவாறு மீளாய்வாண்டில் ரூபா 10,110,775 ஆகியிருந்தது. ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மேற்படி மிகையில் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 8,819,530 ஆகவிருந்த நிறுவகத்தின் பங்களிப்பு தொடர் அதிகரிப்புக்குள்ளாகி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 21,075,415 ஆகியிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

ஆங்கிலத்தைப் போதிக்கும் கல்வியை அதிகரிக்கும் நோக்குடன் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் நிதிசார் ஆற்றல் உள்ள நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டில் இந்நிறுவகம் அமைக்கப்பட்டது. நிறுவகம் ஆரம்பமாகிய 2006 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின்போது பட்டப்பின் படிப்புக் கற்கை நெறிகளையும் டிப்ளோமா கற்கை நெறிகளையும் பூரணமாக நிறைவேற்றிய மாணாக்கரது எண்ணிக்கை முறையே 39 மற்றும் 09 என்பனவாகும். கடந்த 03 ஆண்டுகளின் போது ஓரளவு முன்னேற்றம் தென்பட்ட போதும் நிறுவகத்தின் ஆரம்ப நோக்கை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்பதில் சிறந்த மட்டத்தை நிலை நாட்டுவதற்கு தொடர்ந்து இயலாதிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

திறந்த பல்கலைக்கழகத்திற்குரிய காணி ஒன்றின் உரித்தைச் சட்டபூர்வமாகப் பெறாது ரூபா 91,591,024 செலவில் ஆங்கில மொழி தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**4.3 நிதியம் குறைவாகப் பயன்படுத்தப்படுதல்**

பின்வரும்அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியிடமிருந்து வருடாந்தம் மூலதனச் செலவினத்திற்கெனப் பெறப்படும் பணம் பயன்படாதிருக்க, அதனைக் கருத்திற் கொள்ளாது தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்து மூலதன செலவினத்திற்கெனப் பணம் பெறப்பட்டிருந்தது. இதன் காரணமாக, 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு பெறப்பட்ட பணத்தில் முறையே ரூபா 44,676,212, ரூபா 35,829,434, ரூபா 17,189,312 என்பன எஞ்சியிருந்தன. இவ்வாறு எஞ்சிய தொகையில் மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு ரூபா 44,761,464 குறுகியி கால முதலீடுகளிலிடப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தின் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களுக்கான காலப்பகுதியை நிர்ணயித்து அதற்கமைய தொழிற்படு மூலதனத் தேவைகளை இனங்கண்டு எஞ்சிய மிகையை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது ஏறக்குறைய ரூபா 03 மில்லியன் வங்கியின் நடைமுறைக் கணக்கிலும் சேமிப்புக் கணக்கிலும் தொடர்ந்தவாறிருந்தன.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கல்விசார் பதவியணியினருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 10,314,906 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், நிறுவகத்தால் நடாத்தப்படும் விரிவுரைகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பவற்றில் 85 சதவீதத்துக்கும் மேற்பட்டவை வார இறுதி நாட்களிலேயே நடாத்தப்பட்டிருந்தன. அதன் பொருட்டு வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு ரூபா 841,250, நிறுவகத்தின் விரிவுரையாளர்களுக்கு ரூபா 290,000, கல்விசாராப்

பதவியணியினருக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக ரூபா 276,704 என வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டு வரை வார இறுதி நாட்களிலேயே விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, ஏனைய பல்கலைக்கழகங்களைப் போன்று வார நாட்களில் கல்விசார் பதவியணியினர் விரிவுரைகளில் ஈடுபட்டிராததும் மொத்த விரிவுரையாளர்களது 75 சதவீதத்துக்கும் மேற்பட்ட பங்களிப்பு வெளிவாரி விரிவுரையாளர்கள் மூலம் பெறப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

திறந்த பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் இந்நிறுவகத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டபோதும், நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை போன்ற குறைபாடுகளைக் குறைத்துக் கொள்ளும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் என்பவற்றிற்கும் உள்ளவாறான வருமானம், செலவினம் என்பவற்றுக்கிடையே 60 முதல் 307 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகததின் பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) மூலதன நிதியேற்பாடு முறையாகப் பயன்படுத்தப்படாமை.<br>(ii) மிகையான பணத்தை குறுகிய கால முதலீடுகளில் இடாமை |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டை சக்திமிக்கதாக்குவதற்கென உள்ளகக் கணக்காய்வை பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | முன்னைய ஆண்டுகளது வருமானத்தையும் செலவினத்தையும் மீளாய்வு செய்து பாதீட்டைத் தயாரிக்காமை. |
| (ஈ) சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்துப் பதிவேட்டில் சில சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, கிரயம் என்பன குறித்துக் கொள்ளப்படாமையும் பொருட் கணிப்பு அறிக்கைகளுக்கிடையே இணக்கமின்மையும் |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 8. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

கணக்காய்வாளர் அதிபதி,
இலக்கம் 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்ல.

ஐயா,

**ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின்** 2017 **திசெம்பர் மாதம்** 31 **ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று தொடர்பில்** 1978 **ஆம் ஆண்டின்** 16 **ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்** 108(1) **ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

தங்களால் அனுப்பப்பட்ட 2018-09-28 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் முகமாகவாகும்.

2.2 **நிதிக் கூற்றுதொடர்பிலான கருத்துக்கள்**

2.2.1 **இலங்கை அரசாங்க துறைசார்ந்த கணக்கிடல் தரங்கள்** 07

(அ) நிறுவனத்தின் புத்தகங்கள், பருவ சஞ்சிகைகள் மீள்மதிப்பிடலின் பொருட்டு 2017-11-17 ஆம் திகதியன்று குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டினுள் உரிய பணிகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) நிறுவனத்தின் இயந்திரங்கள் மற்றும் பொருத்துகைகள் 20 சதவீத தேய்வு விகிதாசாரத்தில் இலதாக்கப்பட்டுள்ளதோடு தேய்வு விகிதாசாரம் 20 சதவீதம் என்பதனை கணக்கிடல் குறிப்புகளில் சுட்டிக்காட்ட முடியாமற் போயுள்ளது. எதிர்காலத்தில் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.2 **தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்**

இந்த மாற்றத்திற்கு காரணமாய் அமைந்துள்ளது திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ததன் மூலம் கிடைக்கப் பெற்ற வட்டி வருமானம் கணக்கில் வேறுபடுத்தி காட்டாமையாகும். இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3 **சட்டங்கள்**, **விதிகள்**, **ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை**.

(அ) கல்விசார் பதிவியணியின் சேவைக்காலத்தை மு.ப.8.00 மணியிலிருந்து பி.ப.4.00 மணி வரையிலான காலப்பகுதிக்கு மாத்திரம் வரையறுக்க முடியாது. அவர்கள் உரிய கல்வி நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாதல், தயார்படுத்தல் என்பவற்றுக்காகவும் மாணவர்களின் பிரச்சினைகள் உட்பட ஆலோசனை பணிகள் சார்பிலும் பாடநெறிகள் தொடர்பிலான ஏனைய நடவடிக்கைகள் சார்பிலும் அளவிட முடியாத காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுகின்றனர். இதற்கமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நிருவகிக்கப்படும் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் கல்வி சார் பதவியணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வருகை மற்றும் வெளியேறுகைகளை பதிவு செய்வது சம்பந்தமாக தகவல்கள் இல்லை.

(ஆ) 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மூலதனக் கொடைகள் எடுக்கப்பட்டது புதிய கட்டடம் சார்பில் புதிய ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குமாகும். இந்த

மூலதனக் கொடையை 2017 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், யூலை 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபை கூட்டத்திலும் அதேபோன்று கணக்காய்வுக் குழுவிலும் செலவு செய்யப்படாத மூலதனம் மீண்டும் உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தேவையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 03. நிதி மீளாய்வு

### 03.1 நிதிப் பெறுபேறு

கடந்த வருடத்தின் தொழிற்பாட்டு மேலதிகமானது 3,584,725/- ரூபா ஆவதோடு, 2017 ஆம் ஆண்டில் இது 10,110,775/- ரூபாவாகும். இதற்கிணங்க, தொழிற்பாட்டு மேலதிகமானது கடந்த ஆண்டினை விட 6,526,486/- ரூபாவால் அதிகரித்துள்ளதோடு, இது 182 சதவீதமான அதிகரிப்பாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது பெறுமானத் தேய்வு 2,002,523/- ரூபாவால் அதிகரித்துள்ளது. மேலும் ஊழியர்களின் ஊதியம் மற்றும் பெறுமானத் தேய்வு அதிகரித்தல் என்பன நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமையொன்றாகும்..

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 04.1 செயலாற்றுகை

#### 04.1.1 செயற்பாடும் மீளாய்வும்

செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தானது நிறுவனத்தின் நிதி சார் ஆற்றலின் மீது மாத்திரம் அடிப்படையாய் அமைந்துள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் தேசிய ரீதியிலான தேவையின் மீது இலங்கையில் ஆங்கில கல்வியை சிறந்த மட்டத்திற்கு கொண்டுவருவதற்காக தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். இந்த நோக்கத்திற்குள் நிதி சார் தகவுத்திறன்களின் மீது மாத்திரம் நிறுவனத்தின் செயலாற்றுகையை மதிப்பிட முடியாது.

இதற்கு மேலதிகமாக இலங்கை பல்கலைக்கழகங்களின் துணை பட்டப்பின்படிப்பு நிறுவனங்களின் அண்மையில் தாபிக்கப்பட்ட நிறுவனம் இதுவாகும். பன்னிரண்டு வருட காலப்பகுதிக்குள் செயலாற்றியுள்ள நிறுவனமொன்றாக தற்போது இந்த நிறுவனத்தின் விளைவுப் பொருக்கமானது பல துறைகளில் எண்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான விபரங்கள் இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி என்பது நீண்ட முதலீடொன்றாகையினால் குறித்த இந்த முதலீட்டினை முதலீட்டுக்கான பெறுபேறு கிடைப்பதற்கு சில காலம் செல்லும்.

இந்த நிறுவனம் 2005 - 2010 காலப்பகுதிக்குள் பதிவுசெய்துகொண்ட அதன் மாணவர்களுக்கு அவர்களுடைய கற்கை காலம் தொடர்பில் திட்டவட்டமான காலஎல்லையொன்றை விதித்திருக்கவில்லையென்பதோடு, 2011 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்களுக்கு கற்கை காலப்பகுதியானது ஏழு ஆண்டுகள் என்னும் வரையறை அமுல்படுத்தப்பட்டது. இதற்கு காரணம் இந்த நிறுவனத்தின் தொலைக் கல்வி மற்றும் திறந்த கல்வி வழிமுறைகளின் கீழ் செயற்படுகின்றமையாகும். இந்த வழிமுறையின் கீழ் திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யும் மாணவர் எவருக்கும் அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஏழு வருட காலத்தை செலவு செய்யலாம். இது தொலைக் கல்வி மற்றும் தொடர்ச்சியான கல்வி

வழிமுறையின் நெகிழ்ச்சிகரமான அங்கமொன்றாவதோடு, இது தொடர்பில் விரிவான தெளிவுபடுத்தல்கள் கீழே குறிப்பிடப்படுகின்றது. பழைய பதிவினைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் சிலர் இந்த காலப்பகுதியினுள்ளும் அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்யவில்லை. ஆதலால், நிறுவனத்தின் கல்வி செயற்பாட்டு கட்டமைப்புக்கு அமைவாக, திட்டவட்டமாக பாடநெறிகளை கைவிட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்த முடியாதுள்ளது.

இதற்கிணங்க, கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைவாக, தற்போதைய நிலைமையானது எண்பிக்கப்படவில்லை.

04.2 **முகாமைத்துவ செயற்பாடுகள்**

நிறுவனத்தின் கட்டடம் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையினால் வழங்கப்பட்ட காணியில் கட்டப்பட்டுள்ளதோடு, நிறுவனத்தின் பெயருக்கு அமைவாக நிலையான சொத்துக்களை பேண முடியாது. ஆதலால், காணியின் உரிமை பற்றிய பிரச்சினை நிலவுகின்றதோடு, இது தொடர்பில் உரிய தரப்புகளுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றதோடு, நிதிக் கூற்றுகளில் கணக்கிடல் குறிப்புகள் மூலம் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

04.3 **நிதிகளின் குறைவான பயன்பாடு**

(அ) 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மூலதனக் கொடைகள் எடுக்கப்பட்டது புதிய கட்டடம் சார்பில் உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குமாகும். இந்த மூலதனக் கொடையை 2017 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

அத்துடன், 2018 யூலை 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபை கூட்டத்திலும் அதேபோன்று கணக்காய்வுக் குழுவிலும் செலவு செய்யப்படாத மூலதனக் கொடை பற்றி கலந்துரையாடி இந்த செலவு செய்யப்படாத மூலதனத்தை மீண்டும் உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வில் பிரேரிக்கப்பட்டவாறு வருமானம் சேகரிக்கும் கணக்கு மற்றும் மூலதன கணக்கு என்பன சார்பில் இரண்டு சேமிப்புக் கணக்குகள் 2017 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் 2017 நவம்பர் மாதம் 5.1 மில்லியன் ரூபாவும் திசெம்பர் 11 மில்லியன் ரூபாவும் திறைசேரி உண்டியல்களை காசாக்கியதன் மீது நிறுவனத்தின் சேமிப்புக் கணக்கு மீதியானது அதிகரித்ததோடு, இந்த இரண்டு மாதங்களிலும் 10 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. மேலும் திசெம்பர் மாத இறுதியில் சேமிப்பு கணக்கில் இருந்த மீதியினை முதலீடு செய்யாது கணக்கில் வைத்துக் கொள்ளப்பட்டது. குறித்த மாதத்தில் வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலாகுமென்பதோடு, 2018 ஆம் ஆணடின் ஆரம்பத்தில் திறைசேரி உண்டியல்களில் மீண்டும் முதலீடு செய்யப்பட்டது.

04.04 **பணியாட்டொகுதியினரின் நிருவாகம்**

(அ)(ஆ) தொலைக் கல்வி மற்றும் தொடர்ச்சியான கல்வி முறைகளின் படி திறந்த பல்கலைக்ழகத்தில் உள்ளதுபோன்றே பாடநெறிகள் சார்பில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு வரும் மாணவர்களில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டோர் தொழிலில் ஈடுபட்டிருப்போராவர். இந்த மாணவர்கள் தூர பிரதேசங்களிருந்து

நிறுவனத்திற்கு வருகை தரவேண்டியுள்ளதோடு, அண்மையில் இருப்பவர்களும் கூட தனியார்துறை மற்றும் அரசாங்கத்துறை தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களென்பதானல், வார நாட்களில் பகல் வேளைகளில் வகுப்புகளை நடாத்த முடியாமல் உள்ளது.

தொலைக் கல்வி மற்றும் தொடர்ச்சியான கல்வி முறைகளின் கீழ் கல்வி முறைகளாவன தற்போது தொழிலில் ஈடுபட்டுள்ள, பிற குடும்ப மற்றும் சமூக பொறுப்புகள் கொண்ட வயது வந்தவர்களுக்கு தங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நெகிழ்ச்சியினை வழங்குகின்றது. இதற்கமைவாக, பாடநெறிகள் சார்பில் வழமையான அலுவலக நேரங்களை பயன்படுத்த முடியாது. ஆதலால், வார இறுதி நாட்களில் பாடசாலைகளின் பணிகள் சார்பில் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு வார இறுதிக்கான கொடுப்பனவுகள் திறந்த பல்கலைக்கழகத்தைப்போன்றே ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் நிரந்தர கல்விசார் பணியாட்டொகுதியினர் வார நாட்களில் பாடநெறிகள் சம்பந்தமாக ஒருங்கிணைப்பு பணிகளையும் அதேபோன்று பாடநெறிகளின் தர்க்க மற்றும் தர ரீதியிலான மேம்பாடு தொடர்பிலான இற்றைப்படுத்தல் பணிகளிலும் ஈடுபடுகின்றனர். நிறுவனத்தின் சகல பாடநெறிகளினதும் தகவுத்திறன்களும் கட்டமைப்பும் தற்போது திருத்தியமைக்கப்பட்டு Sri Lanka Qualification Frame Work என்பதற்கமைவாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இருமொழி பட்டப்பின் படிப்பு பாடநெறி சார்பிலும் தொழில்சார் பட்டப்பின் படிப்பு சார்பிலும் ஒருங்கிணைப்பு பணிகளையும் அதேபோன்று கல்வி புத்தகங்களையும் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த சகல பணிகளும் வார நாட்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

## 05. கணக்குப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 05.1 உள்ளக கணக்காய்வு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு பிரிவே ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது. உள்ளக கணக்காய்வுப் பிரிவு சார்பில் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி போதுமானதாக இல்லையென்பதை ஏற்றுக் கொள்வதோடு, பணியாட்டொகுதியை அதிகரித்துக் கொள்வதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் யாவும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கணக்காய்வு குழுவில் கலந்துரையாடப்படுவதோடு, அவற்றின் செயற்பாட்டு முன்னேற்றமானது கணக்காய்வு குழுவின் ஊடாகவும் உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாகவும் அடிக்கடி பரிசீலனை செய்யப்படும்

## 06. வகைமுறையும் கட்டுப்பாடும்

(அ) உரிய துறைகள் தொடர்பில் விசேட கவனத்துடன் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) திறந்த பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுடன் கலந்துரையாடி, உள்ளக கணக்காய்வு பணிகளை திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) செயற்பாடற்ற வங்கி நிலுவைகளை குறுகிய கால முதலீடுகளில் இடுவதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) மாத காலம் பேணப்படவேண்டுமென்பதால் அதற்குப் பதிலாக சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதன் மூலம் சேமிப்பு

வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

**பணிப்பாளர்**.
**ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**

பிரதிகள் :

1. தலைவர், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
2. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
3. செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
4. கணக்காய்வு அத்தியட்சகர், திறந்த பல்கலைக்கழகக் கிளை.
5. சிரேட்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் , திறந்த பல்கலைக்கழகம்